# மன்றம்

வார ஏடு

ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

மலர் 6—இதழ் 29 ★ 17-11-57 சென்னை ★ விலை 16 காசு

# "பாலும் தேனும் ஓடவில்லை!"

## காங்கிரசாட்சியில் இரத்தம், வியர்வை, கண்ணீர், ஓடியிருக்கிறது!

—(0)—

இரா. செழியன்

"வெள்ளைக்காரன்" ஆட்சிபோய், காங்கிரசுக்காரர்கள் ஆட்சிக்கு வந்தால், நாட்டில் தேனும் பாலும் பெருக்கெடுத்தோடும் என்று நானே கூடச் சொல்லி இருக்கிறேன்! நாங்கள் ஆட்சிக்குவந்தால், போலீசே இருக்காது என்றும் நான் பேசியிருக்கிறேன்! ஆனால் அப்பொழுது சொல்லியபடி இப்பொழுது இருக்கமுடியவில்லை. அப்படிப்பட்ட நிலையை அடைவதும் முடியாத காரியம்! ஆனால் அந்தக் காலத்தில் மக்களை வசப்படுத்தவேண்டியிருந்தது. இப்பொழுது நடைமுறையில் செய்யக்கூடியதை யோசிக்கவேண்டியிருக்கிறது! முன்பு மக்களிடம் சொன்னவைகளையெல்லாம் நிறைவேற்ற முடியாத நிலையில் நாங்கள் இருக்கிறோம்!"

ஒரு காங்கிரசுக்காரர் இப்படித் தன்மனதிலிருந்ததை வெளியிட்டுள்ளார்! காங்கிரசுக்காரர் என்றால், எதிர்பார்த்து ஏமாந்து, பின் காங்கிரசென்றால் கசந்துபோய் அதை விட்டு வெளியேறி, "காங்கிரசு பேசியதை நிறைவேற்றவில்லை, பார்த்தீர்களா?" எனக் குதித்க்காட்டுகிறவர் அல்ல! இவர் நல்ல காங்கிரசுக்காரர், பதவியிலிருக்கும், காங்கிரசுக்காரர்! நிதியமைச்சர் பதவியிலிருப்பவர், கனம் சுப்பிரமணியம்! அவர் இவ்வாறு பேசியது வெளியில் பொதுக்கூட்டத்திலோ, காற்று வெளியிலோ, மனம்போன போக்கில் பேசியதல்ல! சட்டசபையில் அவர் பேசியிருக்கிறார்! அதிலும் கனம் சுப்பிரமணியம் சட்டசபையில் பேசும் பொழுது அவசரப்படாமல், மிகநிதானமாக முத்து முத்தாக, பேருண்மைகளை வெளியிடுவதைப்போலப் பேசுபவர்! அவர் தான் காங்கிரசுக்காரர்கள் அன்று சொல்லியதை இன்று நிறைவேற்றவில்லை என்பதை ஒப்புக்கொண்டுள்ளார்!

மந்திரி ஒப்புக்கொண்டுள்ளார், உண்மை நிலையை உணர்ந்து கொண்டுவிட்ட காரணத்தால் அல்ல, சொன்னபடி ஏன் செய்யவில்லை என்று கேட்கப்படும் கேள்விகளிலிருந்து தப்பித்துக்கொள்ள!

"பாலும் தேனும் பாய்ந்து ஓடும்!" எனக் காங்கிரசுக்காரர்கள் அன்று பேசினார்கள், தேனொழுகப் பேசினார்கள்! ஆனால் காங்கிரசாட்சியில், பாலும் ஓடவில்லை, தேனும் ஓடவில்லை! அதாவது போகட்டும், பாலும் தேனும் ஓடவிட்டாலும், இருக்கிற ஆறுகளில் தண்ணீராவது ஓடுகிறதா?

செங்கல்பட்டு மாவட்டத்தில் பாலாறு என்று ஒரு ஆறு இருக்கிறது! பெயர் நன்றாகத்தான இருக்கிறது, பாலாறு! காங்கிரசாட்சியில் பாலாற்றில், பாலும் தேனும் ஓடாவிட்டாலும் தண்ணீராவது தடைப்படாமல் ஓடலாமல்லவா?

நாட்டில் பாலும் தேனும் பாய்ந்து ஓடவில்லை! ஆனால் பால்வடியும் குழந்தைகளை விட்டு பெற்றோர்கள் ஓடியிருக்கிறார்கள், தேன்மொழிபேசும் சேயிழையாரை விட்டு கணவன்மார்கள் ஓடியிருக்கிறார்கள்! வறுமையால் துரத்தப்பட்டு, வாழ்க்கைக்கொடுமையால் துரத்தப்பட்டு கணக்கற்றவர்கள் ஓடியிருக்கிறார்கள்!

நாட்டில் பாலும் தேனும் ஓடவில்லை! பிறந்த பொன்னாட்டில் பிழைக்க வழியின்றி, பெற்ற தாயை மறந்து, வளர்த்த தந்தையை மறந்து, உற்ற மனைவியை மறந்து, ஆசைக் குழந்தைகளையும் மறந்து, கண்ணீரும் கம்பலையுமாக எண்ணற்றவர்கள் கப்பலிலும் கள்ளத் தோணியிலும் ஏறி, இந்த நாட்டைவிட்டு ஓடியிருக்கிறார்கள்!

பாலும் தேனும் ஓடவில்லை! ஆனால் வளங்கள் பல இருந்தும், அவர்களெல்லாம் வெளிநாடுகளுக்கு அடிமைகளாக, கூலிகளாக ஓடியிருக்கிறார்கள்! நாட்டை விட்டு அவர்கள் ஓடினார்கள்! இந்த வாழ்வைவிட்டு, இந்த உலகை விட்டே ஓடியவர்கள் பலர்!

பாலும் தேனும் ஓடவில்லை! இந்த நாட்டு வளம், இந்த நாட்டு பொருட் செல்வங்கள், இந்த நாட்டை விட்டு ஓடுகின்றன!

பாலும் தேனும் ஓடவில்லை! போலீசு இல்லாமலே ஆட்சி புரிவோம் என்று முழக்கமிட்டக் காங்கிரசுக்காரர்கள் ஆட்சியில், துப்பாக்கி வேட்டுகள் எண்ணற்ற தடவைகள் முழங்கியிருக்கின்றன! மண்டைகள் சிதறியிருக்கின்றன, குடல்கள் சரிந்திருக்கின்றன, இரத்தமும் சதையும் வழிந்திருக்கின்றன, பிணங்கள் சாய்ந்திருக்கின்றன! பாலும் தேனும் ஓடவில்லை! ஆனால் காங்கிரசாட்சியில் இரத்த வெள்ளம் ஓடியிருக்கிறது! கொடுமைகள் ஆற்றாது அழுதுபுலம்பிய ஏழைமக்கள் விடுத்த கண்ணீர் வெள்ளம் ஓடியிருக்கிறது! வரிக்கொடுமை தாளாது, வாழ்க்கைச் சுமை தாளாது, பாடுபட்டு உழைப்பவரின் வியர்வை வெள்ளம் ஓடியிருக்கிறது!

தேனும் பாலும் ஓடுமென அன்று காங்கிரசுக்காரர்கள் பேசினார்கள்! இன்று ஆறுகளில் தேனும் பாலும், ஓடவில்லை, திக்கற்றவர்களின் பிணங்கள் மிதந்து ஓடுகின்றன! வேலையற்றவர்கள், வாழ வேறு வகையற்றவர்கள், மரக்கிளையையும் பாழடைந்த கிணறுகளையும் தேடி ஓடியிருக்கிறார்கள்!

காங்கிரசாரின் பத்தாண்டுக் கால ஆட்சியில், பாலும் தேனும் கலந்து ஓடாவிட்டாலும், மக்கள் கூட்டம் எவ்வளவோ தடவைகள் விரட்டப்பட்டு தெருக்களில் துப்பாக்கிக்கும் தடியடிக்கும் பயந்து ஓடியிருக்கிறது! காங்கிரசாரின் பத்தாண்டுக் கால ஆட்சியில் ஜனநாயகம், மனிதப்பண்பு, நீதி, நேர்மை, முதலியவை எவ்வளவோ தடவைகள் தலைதெறிக்க ஓடியிருக்கின்றன!

போலீசே வேண்டாமென்றவர்கள் ஆட்சியில்தான போலீசை அடக்க மற்றொரு விசேஷப் போலீசு தேவைப்படுகிறது! போலீசே வேண்டாமென்ற காங்கிரசுக்காரர்கள் ஆட்சியில், முன்பிருந்ததைப்போல் இரண்டு பங்கு போலீசுக்கு செலவாகிறது! போலீசே வேண்டாமென்ற காங்கிரசு மந்திரிகள் பவனி வர, பலமானப் போலீஸ் பாராவும், வழிநெடுக மரத்துக்கு மரம் போலீசுக்காரர்கள் அணிவகுத்தும் நிற்கவேண்டியிருக்கிறது! போலீசே வேண்டாமென்ற அகிம்சா மூர்த்திகளின் ஆட்சிகாலத்தில், பட்டாளச் செலவு ஐந்து பங்காக உயர்ந்திருக்கிறது!

உண்மையாகவே எதிர்காலத்தில் அவ்வாறெல்லாம் செய்யமுடியுமென்று நம்பி அப்படிப் பேசினார்களா என்றால், அதுவும் இல்லை. "ஏதாவது கூறி மக்களை வசப்படுத்த அப்படியெல்லாம் நாங்கள் சொன்னோம். இப்பொழுது முடியவில்லை!" என்று கனம் சுப்பிரமணியம் அவர்களே ஒப்புக்கொள்கிறார். தமது நோக்கத்தை நிறைவேற்ற ஆசைவார்த்தைகளைச் சொல்லி, காங்கிரசுக்காரர்கள் மக்கள் ஆதரவைச் சேர்த்துக் கொண்டார்கள். அந்த நோக்கம் சரியானதாகக் கூட இருக்கலாம், ஆனால் பொருந்தா கூற்றுகளையும் பொய்களையும் ஏமாற்றும் முறையில் கூறி வந்திருக்கிறார்கள்!

அப்பொழுது கூறியவைகள் நிறைவேறவில்லை, நிறைவேறாது என்று தெரிந்தேதான் அப்படிச் சொன்னார்கள்! அதே காங்கிரசுக்காரர்கள் இப்பொழுதும் எதிர்காலத்தைப் பற்றி ஏதேதோ சொல்கிறார்கள். அவற்றையெல்லாம் எப்படி நாம் நம்புவது? ○

# வங்கத்தில் இந்தி எதிர்ப்பு!

இந்திக்குப் பலமான எதிர்ப்பு வங்காளத்திலும் உருவாகி வருகிறது. தென்னாட்டிலிருப்பதை விட ஆவேசமுறையில் அங்கு கண்டனக் குரல் வலுத்து வருவதாக டாக்டர் சுப்பராயன அவர்கள் சென்னையில் நடந்த கூட்டமொன்றில் தெரிவித்தார்: அரசாங்க மொழிக் குழுவினர் அறிக்கையில் கண்டனக் குறிப்புகளைத் தந்தவர்கள் இரண்டுபேர்கள். ஒருவர்தான் டாக்டர் சுப்பராயன், தென்னாட்டைச் சேர்ந்தவர், மற்றொருவர் டாக்டர் எஸ். கே. சட்டர்ஜி என்பவர வங்காளத்தைச் சேர்ந்தவர்!

இந்தியைவிட வங்காள மொழி நன்கு வளர்ந்த மொழி, இலக்கிய வளம் உடையமொழி! அதிலும் வங்காளிகள் இயல்பாகவே மொழிப்பற்று மிகுதியாக உடையவர்கள். இப்பொழுது இந்தி அரசாங்க மொழியாவதால், தங்களுடைய மொழியின் நலன் கெடும் என அஞ்சுகின்றனர். எப்படித் தென்னாட்டில் பல்வேறு துறைகளிலும் சிறந்தவர்கள் ஒருமுகமாக இந்தி வருவதை எதிர்க்கிறார்களோ, அதைப் போலவே வங்காளத்திலும் ஒன்றுபட்ட எதிர்ப்பு உருவாகி வருகிறது!

இந்தியை எதிர்த்திடும் சக்திகளனைத்தையும் ஒன்றுபடுத்தி, வலிவான எதிர்ப்பு முன்னணி அமைக்க கல்கத்தாவில் ஒரு புதுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் பெயர் **"இந்திய தேசிய மொழிகள் முன்னேற்ற சங்கம்"** என்பதாகும்.

சங்கத்தின் பெயரே ஒரு தேசிய மொழி மட்டும் இருப்பதாக, இருக்கவேண்டுமென்பதை ஒத்துக்கொள்ளவில்லை. பல தேசிய மொழிகள் இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறது. ஒவ்வொரு வட்டாரத்திலும் வழங்குகிற ஒவ்வொரு தாய்மொழியும் ஒவ்வொரு தேசிய மொழியாகும். இவ்வாறுள்ள பல தேசிய மொழிகளும் இந்தியாவில பாதிக்கப்படக்கூடாதென்பதற்கு இந்தச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சங்கத்தின் முக்கிய நோக்கங்கள் "தன மனதில் பட்டதை வெளியிடவும், தனிப்பட்ட வளர்ச்சி வளரவும் சுயநிர்ணய உரிமையடையவும் தாய்மொழி ஒன்றினால் மட்டுமே முடியும். இந்தியாவிற்கு தேசிய மொழி என ஒன்று கிடையாது- இந்த நிலையில், குறிப்பிட்ட ஒரு மொழியை மட்டும் தேசிய மொழி இடத்திற்கு இயற்கைக்கு மாறுபட்ட முறையில் உயர்த்துவது, பல கோடி மக்களால் பேசப்படும் மற்ற மொழிகளுக்குக் கேடு விளைவிப்பதாகும். மற்ற மொழியினரின் சொந்த கலாசாரங்களுக்கு இது விரோதமானதாகும், தமிழ, மராத்தி, பெங்காளி இவைகளைப்போல, இந்தியும் ஒரு வட்டார மொழியாகும்! ஏனென்றால் அது ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தில் மட்டுமே பேசப்படுகிறது. இந்தி அரசாங்கமொழியானால், இந்தி பேசுபவர்களுக்கு அதிகப்படியான அனுகூலத்தைத் தருவதாகும். இது மற்ற மொழி தெரிந்தவர்களின் வாய்ப்புகளைக் குறைப்பதுடன், அரசியல் சட்டத்தில் உறுதிதாப்படும் அடிப்படை உரிமைகளைப் பாதிப்பதாக இருக்கிறது!"

இந்தச் சங்கம் கீழ்கண்ட கோரிக்கைகளை விடுத்துள்ளது.

1. இந்தி தவிர்த்த மற்ற மொழிகளை 'வட்டார மொழிகள்' என அரசியல் சட்டத்தில் அமைப்பது மாற்றப்பட்டு, வழக்கத்திலிருக்கும் அந்த மொழிகள் 'தேசிய மொழிகள்' எனக் குறிக்கப்படவேண்டும்.

2. மாநிலத்திலுள்ள கல்வி முறை, முடிந்தவரை எல்லாப் பகுதிகளிலும், அந்தப் பகுதித் [illegible]ய மொழியிலேயே இருக்க[illegible]ண்டும்- சட்டசபை, நீதி[illegible]ற, அரசாங்க அலுவல் முழுவதும அந்தந்த மாநில மொழியில் நடைபெறவேண்டும்.

3. கல்வித்துறையில் இந்திக்கு எந்த இடம் என்பதை மாநில அரசாங்கங்களும், பல்கலைக் கழகங்களும் தனிப்பட்ட முறையில் முடிவுசெய்து கொள்ளவேண்டும். இதில் மத்திய அரசாங்கத்தின் உத்தரவுகளோ, அறிக்கைகளோ குறுக்கிடக் கூடாது.

4. வெளிநாட்டு மொழிகளிலிருந்து மொழி பெயர்ப்புகள் செய்யும்பொழுது, ஒரு குறிப்பிட்ட மொழியில் மட்டும் செய்வது கூடாது.

5 அகில இந்திய உத்தியோகத் தேர்வுகள் ஆங்கிலத்தில் மட்டும்தான் நடைபெற வேண்டும்.

6 இந்தியாவின் அரசாங்க மொழியாக ஆங்கிலம் ஏற்றுக் கொள்ளப்படவேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு, அந்தச் சங்கம் வேலை செய்ய முன் வந்துள்ளது. இந்தியா முழுவதிலுமுள்ள இந்தியல்லாத மற்றமொழிகளின் ஆதரவுகளைத் திரட்ட அச்சங்கம் பல திட்டங்களை வகுத்துள்ளது.

இந்தியுடன் சிறிதளவாவது தொடர்புகொண்ட வங்காள மொழியினர்கூட "இந்தி கூடாது!" என்று திட்டவட்டமாகக் கூறும்பொழுது, இந்தியுடன் சிறிதும் தொடர்பில்லாத, தனிப்பட்ட வரலாறும், தனிப்பட்ட பண்பாடும், தனிப்பட்ட மொழியியலும் உடைய தென்னாட்டினர் எப்படி இந்தியை ஏற்றுக்கொள்வார்கள்? ●

# மாந்திரீக சக்திக்கு

## மகனைப் பலி தந்த தாய்!

இரண்டாவது செயற்கைச் சந்திரன் ருஷியாவிலிருந்து விடப்பட்டு, 17000 மைல் வேகத்தில் அதுவும் பூமியைச் சுற்றி வந்து கொண்டிருக்கிறது. முதலில் அனுப்பப்பட்ட செயற்கைக்கோளம் 185 பவுண்டு கனமிருந்தது, 560 மைல்களுக்கு மேற்பட்ட உயரத்தில் சுழன்று வந்தது. இரண்டாவது கோளம் முதலில் இருந்ததைவிட ஆறு பங்கு கனத்துடன் 1000 மைல் உயரத்தில் சுழன்றுவருகிறது! வானவெளி பற்றிய விஞ்ஞான ஆராய்ச்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமென இந்தச் செயற்கைச் சந்திரன் பாராட்டப்பட்ட போதிலும், இரண்டாவது செயற்கைச் சந்திரன் விடப்பட்டதைச் சிலர் எதிர்த்தனர், வேறு காரணங்களுக்காக!

இரண்டாவது செயற்கைக் கோளத்தில் "லைகா" என்ற நாய் அனுப்பப் பட்டிருந்தது. வானவெளி உயரத்தில், உயிரினங்களுக்கு ஏற்படக்கூடிய உடல் நிலையை ஆராய அது அனுப்பப்பட்டது! வெறும் வேடிக்கைக்காக அல்ல, விஞ்ஞான உண்மைகள் சிலவற்றைக் கண்டறிய! ஆனால் சிலருக்கு நாயை மேலே அனுப்பியதில் கோபம் வந்தது. "பாவம்! நாயைத் துன்புறுத்தி சோதனைகள் செய்கிறார்களே! சுவு இரக்க மற்றவர்களே!" எனக் கூச்சலிட்டார்கள். இங்கிலாந்தில் மிருக ரட்ச சங்கத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் கண்டனத்தைத் தெரிவித்தார்கள்! இந்தியாவில் சிலரும் அதைப்போலவே நினைக்கிறார்கள். மற்றநாடுகளில் நாய் பழகுகிற ஒரு மிருகம் என்ற அளவில் மட்டும் கவனிக்கப்படுகிறது. ஆனால் இந்தியாவில் நாய் வணங்கப்படும் கடவுள்களிலேகூட ஒன்றாக இருப்பது! ஆக நாயைத் துன்புறுத்துவது அவர்களுக்குப் பெரிதாகப் படுகிறது.

நாயை வைத்துச் செயற்கைச் சந்திரன் அனுப்பப்பட்டதைக் கண்டிக்கும்பொழுது, நாய்க்கு வரும் சங்கடங்களுக்காக மட்டும் அவர்கள் கண்டிக்கவில்லை, விஞ்ஞான வளர்ச்சி என்றாலே அது உயிர்களைத் துன்புறுத்துவதில் தான் இருக்கிறது. விஞ்ஞானம் வளர்ந்தால் உயிரினங்களுக்கு ஆபத்துதான் என்று கருதுகிறார்கள்.

விஞ்ஞான உண்மைகளைக் கண்டறிய ஒரு நாய் அனுப்பப்பட்டதற்கு இவ்வளவு கூப்பாடும் அக்கரையும் எழுந்தது. ஆனால் மூட நம்பிக்கையின் பேரால், மனிதர்கள் கொலை செய்யப் படுகிறார்கள். அதற்கு யாரும் கவலைப் படுவதாகத் தெரியவில்லை!

12—11—57 டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிக்கையில் ஒரு கோரக் கொலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

பம்பாய் மாநிலத்தில் உள்ள ஒரு காட்டில் மண்டையோடும் நொறுங்கின எலும்புகளும் கண்டெடுக்கப் பட்டனவாம். இதை ஆராய்ந்த போலீசார், கேட்டால் திடுக்கிடக் கூடிய பயங்கர கொலை ஒன்று நடந்திருப்பதாகக் கண்டு பிடித்துள்ளனர்.

இந்தப் பயங்கரக் கொலை மாந்திரக சக்திக்காகச் செய்யப்பட்டதாம்.

மாந்திரீகச் சக்திகளில் நம்பிக்கையுள்ளவர்கள் ஒருவனுக்குத் தந்திரயாக மயக்க மருந்து கொடுத்து, அவன் மயங்கி விழுந்ததும், வெட்டிக் கொலை செய்து, சதையை அறுத்து, சமையல் செய்து, சாப்பிட்டிருக்கிறார்கள்!

மனிதனைப் பிடித்துத் தின்னும் நர மாமிச பட்சணிகள் ஆப்பிரிக்கா கண்டத்தில் இருப்பதாகச் சொல்வார்கள். ஆனால் அங்கெல்லாம் இப்போது இல்லை. புண்ணிய பூமியான இந்தியாவில் இருக்கிறார்கள்! மிருகங்களின் மாமிசங்கள் சாப்பிடாமல் மரக்கறி சாப்பிடுவதுதான் தர்மம் எனப் பலமதங்கள் இந்தியாவில் இருக்கின்றன! அண்மையில் உலக மரக்கறி உணவாளர்கள் மாநாடு பம்பாயில் நடைபெற்றது. அந்த பம்பாய் மாநிலத்திலேயே மாட்டையும் ஆட்டையும் அடித்தால் பாபமென்று மனிதனையேக் கொன்று கறியாக்கி சாப்பிட்டிருக்கிறார்கள்! மாந்திரீக சக்தியைப் பெற இந்த வேலையை செய்திருக்கிறார்கள்!

ஒரு மனிதனைக் கொன்று, சதைகளை வெட்டியெடுத்து, சமைத்து சாப்பிட—பயங்கரமான கொடுமை! ஆனால் இவ்வளவையும் செய்தவர்கள் ஒன்பது பெண்கள்!

கிராமத்துப் பெண்களா இவ்வளவு பயங்கரக் கொலைக்கு இறங்கினார்கள் என்று தோன்றும், மாந்திரீக சக்தி அவர்களை அவ்வாறு எல்லாம் செய்யச் சொல்லித் தூண்டியிருக்கிறது!

பயங்கரத்தின் அளவு இத்துடன் நிற்கவில்லை!

(12-ம் பக்கம் பார்க்க)

மன்றம்

ஞாயிறு 17—11—57 சென்னை

# தடைச் சட்டம்!

இரா. நெடுஞ்செழியன்,

இந்திய அரசியல் சட்டத்தையும், அரசாங்கக் கொடியையும், காந்தியாரின் படத்தையோ, சிலையையோ, இவைகளில் ஏதாவது ஒன்றுக்கு எந்த வகையிலும் சேதம் விளைவிப்பதை குற்றமாக்க, சென்னை மாநில அரசாங்கம் ஒரு தடைச் சட்டத்தை மிக அவசர அவசரமாக, ஒரே நாளில் மூன்று விவாதங்களையும் நிகழ்த்தி, சட்டமாக்கியிருக்கிறது. சட்டமாக்கும் உரிமை அரசாங்கத்திடம் இருக்கிறது, சட்டமாக்குவதற்கான அதிகாரமும் அதற்கான சட்டசபை பலமும் ஆட்சியாளரிடம் இருக்கின்றன, அதையும் யாரும் மறுப்பதற்கில்லை! சட்டம் இயற்றுவதே கூடாது என்றும் நாம் கூற முடியாது! சமூகத்தில், அன்றாட வாழ்வில், அமைதி நிலைக்கவும், ஒழுங்கு குலையாமல் இருக்கவும், அமளிதுமளிகள் ஏற்படாவாறு பாதுகாக்கவும் சட்ட திட்டங்கள் தேவை! பொதுமக்களிடை நிலவும் அமைதியைக் குலைப்பதற்கான செயல்கள் விளைந்தால், அந்த சமயங்களில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கச் சட்டப் பிரிவுகள் தேவைப்படுகிறது! ஆனால் அதிகாரம் தம் கையிலிருக்கிறது என்ற காரணத்தினால், அடிக்கடி தடைச் சட்டங்களைப் போட முயல்வது சரியானதல்ல!

புதிதாகத் தடைச் சட்டம் கொண்டுவந்த சென்னை அரசாங்கம், பெரியார் அவர்களும் திராவிடர்க் கழகமும் செய்யக்கூடிய செயல்களைக் குறிப்பிட்டுத்தான் அந்தச் சட்டம் கொண்டுவரப்படுவதாக சட்டசபை விவாதத்தில் அறிவித்துள்ளது! ஆனால் பெரியாராலும் அவரது கட்சியினராலும் செய்யும் காரியங்களினால், பொதுமக்களின் அமைதிக்குப் பங்கமோ, சச்சரவான சூழ்நிலைகளோ ஏற்பட்டால், இப்பொழுதிருக்கும் சட்டங்களின் துணை கொண்டே அந்த நிலைமைகளை அரசாங்கம் சமாளித்து விடலாம்! ஆனால் இருக்கும் சட்டங்கள் போதாவென்று, இன்னொரு புது சட்ட அதிகாரத்தை அரசாங்கம் உண்டாக்கிக் கொண்டதற்கான காரணத்தை அரசாங்கம் சரியாக விளக்கவில்லை! இவ்வளவு காலம் தாங்கள் நடவடிக்கைகள் எடுக்காததற்கு ஒரு காரணமாகக் காட்ட வேண்டுமானால், இந்தப் புதுச்சட்டத்தை அரசாங்கம் உபயோகிக்கலாம்!

அரசாங்கத்தினர் யாரைத் தண்டிக்கவேண்டுமென்று குறிவைத்துச் சட்டத்தைச் செய்கிறார்களோ, அந்தப் பெரியார் அப்படியொன்றும் அரசாங்கத்தைக் கவிழ்க்க வேண்டுமென்றோ, அரசாங்கத்துக்கு வீண் தொந்தரவு கொடுக்கவேண்டுமென்றோ நினைப்பவரல்ல! யார்மீது சட்டபணத்தைத் தொடுக்க காமராஜர் மந்திரி தயாராகிறதோ, அந்தப் பெரியார்தான் இந்தக் காமராஜர் ஆட்சிவரவேண்டும் என அல்லும் பகலும் அனவரதமும், ஓய்ச்சல் ஒழிவின்றி இந்தத் தள்ளாத வயதையும் பாராமல், பாடுபட்டவர்! இப்பொழுது வேண்டுமானால், பெரியாரின் துணை எங்களுக்குத் தேவையில்லை எனக் காமராஜர் மந்திரி சபையிலிருப்பவர்கள்—காமராஜர் அல்ல, இந்த பெரியார் எதிர்ப்புச் சட்டம் வருகிற நாளில் காமராஜர் இருக்கவில்லை, இருந்தாலும் பச்சைத் தமிழரல்லவா, "பச்சையாக" எப்படி எதிர்ப்புச்சட்டத்தைப் போடுவார்—கூறியபோதிலும் தேர்தல் காலத்தில், பலப்பல இடங்களில் பெரியாரைத் தேடித் தேடி அழைத்துவந்து காங்கிரசுக்குச் சார்பாகப் பிரசாரம் செய்யச்சொன்னார்கள்; சட்டம் நிறைவேற்றுகிறபொழுது சட்டசபையில் ஆளுங் கட்சியில் இருந்த பலருக்கு பெரியாரின் துணை அன்று தேவைப்பட்டது! "காமராஜர்தான் ஆட்சிக்கு வரவேண்டும், அவர் ஆட்சியில்லையென்றால் இன்னும் பல நூற்றாண்டுகளுக்கு தமிழர்கள் வாழ்வு அதோகதிதான்!" என உண்மையாக நம்பி, பாடுபட்டவர் பெரியார்! அந்தப் பெரியார் இப்பொழுது—ஏழெட்டு திங்கள்களுக்குள்ளாக—காமராஜர் ஆட்சிக்கு எதிராகப் போகமாட்டார். காமராஜர் ஆட்சிக்குக் களங்கம் ஏற்பட முற்படமாட்டார்! பெரியாரை உதறித்தள்ளிவிட இதுதான் தக்க சமயம், மறு தேர்தல் வர எவ்வளவோ ஆண்டுகள் இருக்கிறது பார்த்துக்கொள்ளலாம் எனக் காமராஜர் நாள் குறித்துக்கொண்டால் அதை யாரும் தடைசெய்ய முடியாது!

காமராஜர் அரசாங்கத்துக்காகப் பாடுபட்டவர் பெரியார்! காமராஜர் சொன்னால், செவிசாய்க்கக்கூடியவர் அவர்! முதன்மந்திரியாக இருப்பவர் அவரைப் போய் எதற்காகச் சந்திப்பது, அவரிடம் என்ன பயம் என்று கேட்கலாம்! பயம் அல்ல, அவர்களிடையே உள்ள அரசியல் பாசத்தினால் அப்படிச் செய்யலாம்! இரண்டு ஆண்டுகளுக்கு முன் பிறந்தநாள் விழாவில் வீடு தேடிச் சென்று பெரியாரை வாழ்த்திவந்த காமராஜர், இப்பொழுது அவருடைய பிறந்த நாள் விழாக் கொண்டாடப்படுகிற சமயத்தில் தடைச் சட்டத்தைப் பரிசாக அனுப்பவேண்டிய அவசியமில்லை! அண்மையில் சென்னையில் பேசிய கூட்டத்தில் கூட, பெரியாரவர்கள் சென்னை மந்திரிகளைச் சந்தித்துப் பேசத் தாம் தயாராக இருப்பதாகக் கூறியிருக்கிறார்! புதுச்சட்டத்தைப் பிரயோகிக்கத்தான் வேண்டும் எனச் சமயம் பார்த்திருந்தாலன்றி, காமராஜரோ அவரது கனம்களோ நெருக்கடிகள் ஏற்படாவண்ணம் முன்கூட்டியே தவிர்க்கலாம்! திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இப்படிக் கூறும்பொழுது, ஏதோ "தந்தை—மகன்" பாசம் என்று மந்திரி சபையினர் கூறுகின்றனர்! அண்ணா சட்டசபையிலேயே குறிப்பிட்டதுபோல, அங்கிருந்தவர்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தினரைத் தவிர, மற்றவர்களெல்லாம் ஒவ்வொரு சமயம் உதவியைப் பெற்றவர்கள். நீண்ட காலத்துக்குமுன் அவர் காங்கிரசில் பொறுப்பு வாய்ந்த பதவிகளில் இருந்திருக்கிறார், காங்கிரசை வளர்க்கப் பாடுபட்டிருக்கிறார். இப்பொழுது காங்கிரசிலிருக்கும் பலருக்கு அவர் தாத்தா நிலையிலிருக்கிறார்! ஆக அவருக்கும் காங்கிரசுக்காரர்களுக்கும் தாத்தா—பேரன் முறை இருக்கிறது! அந்தப் பாசத்தினால் கனம் சுப்பிரமணியம் கூட விவாத முடிவில் மிக உருக்கமாகப் பேசியதில் வியப்பில்லை!

பெரியார் கையாளுகிற முறைகள் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு உடன்பாடல்ல! அவருடைய போக்கும் பேச்சும் வகுக்கிற திட்டங்களும் திராவிடர்க் கழகத்துக்காக உண்டாக்கப்படுகின்றன! திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு எதிராக இருப்பதால்தான் இப்படியெல்லாம் பெரியார் காங்கிரசுக்கு ஆதரவு தந்தார் எனக் காங்கிரசு மந்திரியே சட்டசபையில் கூறியுள்ளார்! சமூகத்தில் உயர்வு—தாழ்வு நீங்கி சமநிலை வேண்டுமென்றால், இருக்கும் சாதி வேற்றுமைகள் ஒழிய வேண்டுமேயன்றி, குறிப்பிட்ட ஒருசில சாதியினரைஒழிக்க வேண்டுமென்பது அல்ல எனத் திராவிட முன்னேற்றக் கழகம் கருதுகிறது! சாதிப்பிரிவுகளில் உயர்சாதி தாழ்சாதி இருபாலாரும் சிக்கியிருக்கின்றனர்! இந்தத் தடைகளைச் சமாதானமாக நீக்கவேண்டும், நீக்க முடியும் என திராவிட முன்னேற்றக்கழகம் நம்புகிறது! ஆனால் புதிய தடைச் சட்டங்கள் போட்டு, வரையற்ற முறையில் அதிகாரங்களை அரசாங்கத்திடம் குவிப்பது, ஜனநாயக வளர்ச்சிக்குச் சரியல்ல என்பதால்தான், புதிய சட்டத்தின் துணையின்றியே நிலைமையை அரசாங்கம் தவிர்க்கவேண்டும் எனக் கழகம் ஆலோசனை கூறியது!

# மேலான பார்வைக்கு

**ரஷியாவின் பிரதம மந்திரி புல்கானின் அவர்களின் மேலான பார்வைக்கு மருதூர் பாரதம் மன்னார்சாமி பண்டிதர் எழுதிக்கொண்டது.**

ரஷியாவி விருப்பவர்களுக்கு கடிதம் எழுதுவதென்றால் முன்பெல்லாம் எனக்குப் பயமாக இருக்கும். இப்பொழுது ராஜ்கோட்டிலிருந்து ஒருவர் உங்களுக்குக் கடிதம் எழுதினதாகச் சொன்னார்கள். அதற்கு மேல் துணிவு வந்து இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். பாரத யுத்தத்தில் வீம மகாராசா விசியெறிந்த யானைகளுக்குச் செய்தி சொல்லியனுப்பி, அந்த ராஜ்கோட் ஆசாமி கடிதம் எழுதினதாகத்தெரிகிறது. பாரதத்தில் எனக்கு நல்ல பாண்டித்தியம் உண்டு. உங்களுக்குச் சொல்லவேண்டிய விசயம் ஏராளமாக இருக்கிறது.

நான் பாரதக் கதா காலட்சேபம் செய்யும் பொழுதெல்லாம் உங்கள் நாட்டிலிருப்பவர்களைப்பற்றி ஞாபகம் வரும். பாரதப்பெயர்களை எதிரொலிப்பதுபோல, உங்கள் நாட்டுப் பெயர்கள் இருக்கின்றன. உங்கள் பெயரையே எடுத்துக் கொள்ளலாம்! புல்கானின் என்பதைப் போலவே பாரதத்தில் ஒரு பெயர் இருக்கிறது. அது தான் "பல்குனன்" என்பது! அர்ச்சுன மகாராசாவுக்கு அது ஒரு பெயர். இன்னும் "குருஷேவ்" என்பதுபோல் "குருதேவ்"; "கிஸ்லோவ்" என்பதுபோல் "சிசுபாலன்"; "மலினோவஸ்கி" என்பதுபோல் "மாலினிவாசன்' இப்படிப் பல பாரதப் பெயர்களை எடுத்துக் காட்டலாம்.

நீங்கள் சந்திர மண்டலத்துக்குப் போக முயற்சி செய்வதாகத் தெரிகிறது. ஆபத்து வந்து போவதாக நான் சொல்லவில்லை! இப்பொழுது செயற்கைச் சந்திரனை விட்டதற்குப் பிறகு, சந்திரமண்டலம் போக நினைப்பது சரிதான். இதில் எனது யோசனையை நீங்கள் கவனிக்கவேண்டும். பாரத இதிகாசங்களையும் சகல புராணங்களையும் படித்து அதிகமான விசயங்கள் தெரிந்திருக்கிறதால் சொல்கிறேன்! சந்திர மண்டலத்திற்குப் போவதற்குமுன், முதலில் சூரியமண்டலம் போவதுதான் நல்லது. பூமிக்கு அடுத்தபடி சூரிய மண்டலமும் அதற்குப் பின்பு சந்திரமண்டலமும் இருக்கின்றன. ஆக வழியிலிருக்கிற சூரிய மண்டலத்திற்குப் போனால், பின் அங்கிருந்து சாவகாசமாகச் சந்திரமண்டலம் போகலாம். முதலில் சூரிய மண்டலமும் பின்பு சந்திர மண்டலமும இருப்பதாகத்தான் புராணங்களில் இருக்கிறது. இப்பொழுது இருப்பவர்களில் பலரிடம் சொன்னால் அவர்களுக்குப் புரியவில்லை. புராணங்களைச் செய்தவர் பிரமா.. உலகங்களை உண்டாக்கிய அவருக்குத் தெரியாததா இவர்களுக்குத் தெரியப் போகிறது! ஒருவேளை, கலிகாலத்தில் எல்லாம், மாறிப்போய் விட்டதோ என்னவோ!

நீங்கள் சில நாட்களுக்குமுன், ஒரு நாயை வைத்து வானத்தில் விட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். நாங்கள் சந்திர மண்டலத்துக்கே மானை அனுப்பியிருக்கிறோம்! சந்திரனில் மான மட்டுமல்ல, ஒளவைப் பிராட்டிகூட அங்கேதான் இருக்கிறார்கள்! இவர் புராண காலத்தில் போன ஒளவை! சந்திரமண்டலத்துக்குப் போகும்பொழுது, மானுக்கு கொஞ்சம் புல் போடுங்கள்! ஒளவைப் பிராட்டியாரைப் பார்த்தால், மருதூர் மன்னார்சாமிப் பண்டிதர் கேட்டதாகச் சொல்லுங்கள்!

சந்திரனிடம் போய்ச் சேர்வது ஒன்றும் பெரிய காரியமல்ல! இப்பொழுது நீங்களாவது இவ்வளவு சிரமப்பட்டு அங்கு போகப்பார்க்கிறீர்கள். புராண காலத்தில் சந்திரன் பூலோகத்திற்கு அடிக்கடி வரவழைத்துக் கொண்டிருந்தார்கள்.

இன்னொன்று, இதை மிக ரகசியமாக வைத்துக்கொள்ளுங்கள்! சந்திரமண்டலத்துக்கு அனுப்புகிற கூட்டத்தில், பெண்கள் யாரையும்—கொஞ்சம் அழகுடனிருப்பவர்களை அனுப்பவேண்டாம். பெண்கள் விஷயத்தில் சந்திரன் ஒருமாதிரிதான்! இதற்கு மேல் நான் அதிகம் சொல்லக் கூடாது. என்ஜாதகப் பலனின் இபபொழுது சந்திரதிசை இருக்கிறது. வீணாக அவனுக்கு ஏன் கோபமூட்டவேண்டும்?

சந்திரனுக்குப் போகும் பொழுது, கிரகணம் வராத நாட்களாகப் பார்த்துப் போகவேண்டும்! அந்த நாட்களில் ராகு கேது பாம்புகள் அங்கு வந்து அப்படியே விழுங்கிவிடும்!

சந்திரமண்டலத்தைப் பற்றி எனக்குத் தெரிந்தவைகளையெல்லாம் சொன்னால் பெரிய புத்தகமாகிவிடும். சந்திரமண்டலம் போவதில் ஏதாவது உங்களுக்குப் புரியவில்லையென்றால், என்னைக்கேட்டால் சவிஸ்தாரமாகச் சொல்ல நான் தயார்!

இப்படிக்கு
பாரத ரத்ன (பாரதக் கதை செய்வதில் பிரசித்து பெற்ற)
மருதூர் மன்னார்சாமி பண்டிதர்

பின் குறிப்பு: குருஷேவ் அவர்களுக்கு, நீங்கள் பார்த்ததும், புல்கானின் அவர்களிடம் இந்தக் கடிதத்தைச் சேர்க்கும்படி கேட்டுக் கொள்கிறேன் —மன்னார்சாமி.

# மூன்று இந்தியாக்கள் !

—(0)—

## பண்டித நேருவின் கண்டுபிடிப்பு.

—(0)—

"இந்தியாவின் கண்டுபிடிப்பு" என்ற நூலை பண்டிதநேரு அவர்கள் எழுதியுள்ளார்கள். பண்டித நேரு அவர்கள் இந்தப் பரந்த பாரத கண்டத்தின் பிரதமராக இருக்கிறார்; பத்தாண்டுக் காலத்துக்குமேலாக இருக்கிறார்; இருந்தாலும் அவரே இந்தியாவைக் "கண்டுபிடிக்க" வேண்டிய அவசியத்திலிருக்கிறது! இந்தியாவைக் "கண்டுபிடித்து", அதை ஒரு நூல்வடிவத்தில் பண்டிதநேரு அவர்கள் கொடுத்தார்கள்!

இந்தியாவை கண்டுபிடித்து, முதல்முறையாக அறிவித்த நேரு பண்டிதர், இப்பொழுது அந்த ஆராய்ச்சியை மேலும் தொடர்ந்து, சில உண்மைகளைத் தந்துள்ளார். இப்பொழுது ஆராய்ந்து பார்த்ததில், இந்தியா "மூன்று இந்தியாக்களாக" அவருக்குக்காட்சியளித்திருக்கிறது!

டில்லியில் கூடிய பல்கலைக் கழக மாணவர் விழாவில், நவம்பர் 1-ஆம் தேதி பண்டிதநேரு பேசுகையில் "மூன்று இந்தியாக்களைப்" பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"இப்பொழுது உள்ள மக்கள் மூன்றுவது இந்தியாவின் வாயலில் நிற்கிறார்கள். இரண்டாவது இந்தியாவை விட்டு, மூன்றுவது இந்தியாவுக்கு வரவேண்டும். இரண்டாவது இந்தியா என்பது சாதிப்பிரிவு, வைதிகம், குறுகிய மனப்போக்கு, மூடநம்பிக்கை, கண்மூடித்தனம் இவைகளைக் கொண்டது."

"இரண்டாவது இந்தியாவைப் பற்றி விவரித்துப் பண்டித நேரு மேலும் கூறுகிறார்:

"புது எண்ணங்களைக் கண்டுப் பயப்படும் காலம் ஆரம்பமானது. பயம் பலவீனத்தின் அறிகுறியாயிற்று. மனித உள்ளம் சுருங்கியது, குறுகியதாயிற்று. சமூகம் ஆயிரக்கணக்கான சாதி சமயப் பிரிவுகளில் பிளவுபட்டது......சாதிப்பிரிவு என்ற இரும்புத்திரை விழுந்தது. யாரைத் தொடலாம், யாரை மணக்கலாம், யாருடன் கூட அமர்ந்து உணவருந்தலாம், இவைகள் சமூகத்தில் முக்கிய கோட்பாடுகளாயின. இந்தக் குறுகிய நோக்கங்களைக் காப்பாற்ற வலிவான கட்டுப்பாடுகள் வந்தன. நெற்றியில் பலவிதமான சாதிக்குறிகளைப்போட்டு சிலர் தங்களை மற்றவர்களிடமிருந்து பிரித்துக் கொண்டார்கள்."

சாதிப்பிரிவுகள் கொண்ட இந்தியாவைப் பண்டித நேரு நன்றாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்!

இந்தியாமட்டும் மூன்று இந்தியாக்களாக இல்லை. நேருகூட மூன்று நேருக்களாக இருக்கிறார்!

முற்போக்கு எண்ணங்களைக் கொண்ட ஒரு நேரு இருக்கிறார்!

இந்தியாவின் பிரதமராக வெளிநாடுகளின் பாராட்டைப் பெறப் பேசுகிற ஒரு நேரு இருக்கிறார்!

காங்கிரசைச் சேர்ந்தவராகச் செயல்முறையில் ஈடுபடுகிற ஒரு நேரு இருக்கிறார்!

எண்ணத்தில், பேச்சில், செயலில்—மூன்று நேருக்கள் இருக்கின்றனர்!

முற்போக்கு எண்ணமுள்ள நேரு!

பிரசித்திபெற்ற பிரதமர் நேரு!

காங்கிரசைக் காப்பாற்றும் தலைவர் நேரு!

ஆட்சிச் செயல்முறையிலும் காங்கிரசுக் கட்சியிலும் எத்தனையோக் குறைகள் இருந்தபோதிலும், பண்டித நேருவின் எண்ணத்தில் அரும்பிடும் முற்போக்கு எண்ணங்கள் சிற்சில சமயங்களில் வெளிவரத்தான் செய்கின்றன! அதிலும் இந்திய சமூகத்தில் காணப்படும் குறைபாடுகளைப்பற்றி, பண்டித நேரு நன்றாகப் பேசியிருக்கிறார்!

இரண்டாவது இந்தியா என்று, பிற்போக்கான நிலையின் அடையாளங்களை அவர் நன்றாகச் சுட்டிக் காட்டுகிறார்.

சாதிப்பிரிவு
வைதிகம்
குறுகிய மனப்போக்கு
மூட நம்பிக்கை
கண்மூடித்தனம்

சமூகத்திலுள்ள குறைபாடுகள் பண்டித நேருவுக்குத் தெளிவாகத் தெரிகிறது. ஆட்சிப் பொறுப்பில் முக்கிய இடத்தில் அவர் அமர்ந்துள்ளார்! இந்த ஐந்து குறைபாடுகளையும் சுட்டிக் காட்டுகிற பிரதமர், ஏன் அந்த ஐந்து குறைகளையும்—பஞ்ச கேடுகளையும் போக்க, புதிதாக ஒரு "பஞ்சசீலம்" வகுக்கக்கூடாது?

எண்ணங்களின் வளர்ச்சியை அடிப்படையாகவைத்து இந்தியாவில் மூன்று இந்தியாக்களை பண்டித நேரு பிரித்துக் காட்டினார்! அரசியல், பொருளாதார, பண்பாடு இவைகளை அடிப்படையாக வைத்துப் பார்த்தாலும், இந்தியாவில் மூன்று இந்தியாக்கள் இருந்திருக்கின்றன என்பது தெரியும்! ஒரு இந்தியா—பாக்கிஸ்தான் இந்தியா பிரிந்து போய் விட்டது! இரண்டாவது மிகுந்திருப்பதில் வட இந்தியா, மூன்றாவதாக தென் இந்தியா! பண்டிதநேரு சொல்வது போல மூன்றாவது இந்தியாவை அடையும் கட்டத்தில் நாம் இருக்கிறோம்! ❍

# சா(ப்) பாடு!

(இரா. செழியன்)

1. டில்லிக் கோட்டையில் போடற திட்டம்மூனு!
இரண்டு திட்டம் மோசம்;
ஒன்னு புரியவே இல்லே!

2. புரியாத திட்டத்துக்கு எடுத்த வருசம்மூனு!
இரண்டு வருசம் வீண்;
ஒன்னில் வேலையே இல்லே!

3. வேலையில்லா வருசத்துக்கு ஆனசெலவு மூனுகோடி!
இரண்டு கோடி ஊழல்;
ஒன்னுக்குக் கணக்கே இல்லே!

4. கணக்கில்லா செலவை செஞ்சமந்திரி மூனுபேர்!
இரண்டு மந்திரி ஊர்சுத்தி;
ஒருத்தர் இருப்பதே இல்லே!

5. இருக்காத மந்திரிக்கு கொடுத்த இலாகாமூனு!
இரண்டு இலாகா தூங்குமூஞ்சி;
ஒன்னு விழிக்கறதே இல்லே!

6. விழிக்காத இலாகா கேட்டதொகை மூனுபங்கு!
இரண்டு பங்கு கிடைக்கலே;
ஒன்னுக்கு வழியே இல்லே!

7. வழியில்லா வகையில் போட்ட அணைமூனு!
இரண்டு அணை கட்டலே;
ஒன்னு முடியவே இல்லே!

8. முடிக்காத அணைக்கு வெட்டின கால்வாய்மூனு!
இரண்டு கால்வாய் பாழ்;
ஒன்னுக்குக் கரையே இல்லே!

9. கரையில்லா கால்வாயால் பாய்ந்த கிராமம்மூனு!
இரண்டு கிராமம் வரட்சி;
ஒன்னில் வளமே இல்லே!

10. வளமில்லா ஊரில் இருக்கும் வயல்மூனு!
இரண்டு வயல் தரிசு;
ஒன்னில் பயிரே இல்லே!

11. பயிரில்லா வயலுக்கு இருக்கும் உழவன்மூனு!
இரண்டு பேர் பட்டினி;
ஒருத்தன் சாப்பிடவே இல்லே!

12. சாப்பிடாத உழவன் செலுத்தற வரிமூனு!
இரண்டு வரி அநியாயம்;
ஒன்னுக்கு நியாயமே இல்லே!

13. நியாயமில்லா வரியில் செலுத்தறது மூனுபணம்!
இரண்டு பணம் வடநாட்டுக்கு;
ஒன்னு தெற்கே இல்லே!

14. வடக்கேபோற பணத்துக்கு வரவுசெலவு மூனுவகை!
இரண்டு வகையில் நஷ்டம்;
ஒன்னில் வருவாய் இல்லே!

15. வகையற்ற வருவாய்க்கு வாய்த்த வழிமூனு!
இரண்டு வழி கடன்;
ஒன்னுக்கு முதலே இல்லே!

16. முதலில்லா ஆட்சிக்கு மூடுமந்தரம் மூனுவகை!
இரண்டு வகை கொள்ளை;
ஒன்னுக்கு அந்தப்பேர் இல்லே!

17. பேரில்லா ஆட்சியில் பிழைக்கிறது மூனுபேர்!
இரண்டு பேர் முதலாளி;
ஒருத்தன் ஏழையே இல்லே!

18. ஏழையை அடக்க எடுக்கும் முறைமூனு!
இரண்டு முறை அடக்குமுறை;
ஒன்னு உரிமையே இல்லே!

19. உரிமையில்லா இங்கே இருக்கிற ஆதிக்கம்மூனு!
இரண்டு ஆதிக்கம் டில்லியில்;
ஒன்னு வெளியே இல்லே!

20. டில்லிக் கோட்டையில் போடுகிற திட்டம்மூனு!
இரண்டு திட்டம் மோசம்;
ஒன்னு புரியவே இல்லே!

"என்னப்பா, கட்டுரையை ஆரம்பிக்கும் பொழுதே, பாட்டில் ஆரம்பிக்கிறயே?"

"என்ன செய்வது? நாடு போகிற போக்கைப் பார்த்தால், வேதனை பிறக்கிறது. அதிகமாக வேதனைப்படும் பொழுது, சிறிது பாடலாமா என்றுதான் தோன்றுகிறது. வேதனை சற்றுத் தணியும் என்ற எண்ணத்தினால்தான்! மகிழ்ச்சியாக இருக்கும் பொழுது மட்டும்தான் பாடுகிறார்கள் என்று அர்த்தமில்லே. அதிகமாகத் துன்பப்படும் பொழுதுகூட பாடுகிறார்கள்! வெள்ளித்திரையைப் பார்த்தால், அதில் பாட்டுப் பாடும் இடங்கள் அதிகமாக வருவதைப் பார்த்திருக்கலாம்! மாலை நேரம்! சோலைப்பக்கம்! மலர்ச் செடிகள் அருகே மாருதம் மருவித் தவழ்ந்து வர, மயில் ஆடிட, குயில் பாடிட, மையிருள் சூழ்வது கண்டு வெண்மதி எழுந்துவர, இங்கே காதலனின் மன இருளைப் போக்க 'விண்ணிலே தவழ்ந்த மதி மண்ணில் வந்ததோ' எனப் பண்ணிசைக்கும் வகையில், மயிலைப் பழிக்கும் நடையுடன், குயிலைப் பழிக்கும் மொழியுடன், அவனுடைய மனதுக்கிசைந்த காதலி வரும் பொழுது காதலன்—தான் பாடாவிட்டாலும், பின்னணிக் குரலை இரவல் வாங்கியாவது பாடித்தான் தீர்கிறன்! மன மகிழ்ச்சியுடன், காதலியுடன், இருக்கும் பொழுது மட்டும் தான் படங்களில் பாட்டு வருகிறது என்று கூறமுடியாது! அதே காதலன், தன் காதலியைப் பிரிந்து காட்டிலோ, பாலைவனத்திலோ, அல்லது சோலைவனத்தில் இருந்தாலும் அது பாலைவனமாகத் தோன்றும் நிலையிலோ, சோகமயமாக இருக்கும் பொழுதும் பாட்டுப் பாடுகிறன்! ஆக மனமகிழ்ச்சியுடன் இருந்தால் மட்டும் பாடலாம் என்பதல்ல, வேதனைப் பட்டாலும் பாட்டுத் தோன்றும்! பாட்டு மகிழ்ச்சியாக இருப்பவனின் மகிழ்ச்சியை அதிகமாக்குகிறது, வேதனைப் படுபவனின் வேதனையைச் சற்றுக் குறைக்கிறது! நாடகம், சினிமா, இவைகளில் சோகக் கட்டத்தில் வருகிற பாட்டாவது வேண்டுமென்று அவசியமற்றுப் பாடப்படுகிறது என்று கூறிவிடலாம்! ஆனல், அன்றாட வாழ்வில் கூடப் பாருங்கள்! அதோ! மலைபோலச் சாமான்களை ஏற்றிக் கொண்டு, வேகாத வெய்யலில் வியர்வை வழிய, இரண்டு பாட்டாளிகள் கைவண்டியை இழுத்து வருகிறர்களே! அவர்கள் ஏன் களைப்பையும் நாவரட்சியையும் சட்டைசெய்யாமல், பாடிக் கொண்டு வருகிறர்கள்? மனமகிழ்ச்சியால் பாடுகிறர்கள், இல்லே, முதுகு வலியையும் மன வலியையும் சிறிது தணிக்க அவர்கள் பாடிக் கொள்கிறர்கள். வேறென்றுங்கூட வேண்டாம், சாப்பாட்டுக்கில்லாமல் அலைந்து திரிந்து வேதனைப்படுகிறவனைப் பார்த்து ஊரார்கள் என்ன சொல்கிறர்கள், 'சாப்பாட்டுக்கே அவன் தாளம் போடுகிறன்' என்று சொல்கிறர்கள். ஏன்? தாளம் போடுகிறது யார் வேலை? பாட்டுப் பாடுகிறவன் செய்யவேண்டியது, பாட்டுக் கச்சேரியில் இருப்பவன், பாட்டை ரசிப்பவன் செய்கிற வேலே! இருந்தாலும், சாப்பாட்டுக்கு இல்லாதவன் பாட்டுப்பாடி, தாளம் போட ஆரம்பித்துவிடுகிறன்."

"சாப்பாட்டுக்கு இல்லாதவன் பாட்டுப்பாடுவானு, என்ன?"

"சாப்பாட்டுக்கு இல்லாவிட்டால், மனிதன் என்ன ஆவான்?"

"இது என்ன கேள்வி? செத்துப் போவான்!"

"சாப்பாட்டுக்கு வழியில்லையென்றால் சாவுமட்டுமல்லே, பாட்டுகூட வரும்! இதோ பார்! அந்த 'சாப்பாடு' என்ற சொல்லை நன்றாகப் பார்! 'சாப்பாடு—பிரித்தால் 'சா' 'பாடு' ஒன்று சா—செத்துப்போ, இல்லையென்றால் பாடு—பாட்டுப்பாடு! என்றுதான் வரும்! மனிதனிடமிருந்து, சாப்பாட்டைப் பிரித்தால், சாவும் வரும், பாட்டும் வரும்! ஆமாம்!"

"அது சரி, சாப்பாட்டுக்கு இல்லாமல் பாட்டு வருகிறதென்றால், டில்லி அரசாங்கத்தைப் பற்றி ஏன் பாடவேண்டும்? ஏதாவது 'கா, கா, கா!' என்று காக்கா, குருவிப் பாட்டைப் பாடியிருக்கிறதுதனே!"

"இப்பொழுது காகா, குருவிகளெல்லாம் நன்றாகத்தான் இருக்கின்றன, டில்லி ஆட்சியின் கீழ் மக்கள்தான் சாப்பாடு இல்லாமல் தவிக்கிறர்கள்!"

"எல்ல மக்களுமா தவிக்கிறர்கள்?"

"இல்லே! பறவையினத்தில் காகா, குருவியெல்லாம் நன்றாக இருக்கிறமாதிரி, டில்லி அரசாங்கத்திலும் காகா பிடிப்பவர்கள், குருவி பார்ப்பவர்கள் நன்றாக இருக்கிறர்கள். பொதுவாக மக்கள் வேதனைப் படுகிறர்கள். டில்லி அரசாங்கம் கொஞ்சம் கொஞ்சமாகப் பொதுமக்களிடமிருந்து சாப்பாட்டைப் பிரித்து வருகிறது.

(11-ம் பக்கம் பார்க்க)

(சிறுகதை)

# அவள் முடிவு

(நாஞ்சில் செ. அன்பெழில்)

“சாவதுநிசமே நீ ஏன்
வீணே
சஞ்சலப் பேய்வச
மானாய்....”

நெல் விழுந்த கிராமபோன் பிளேட்போல அந்த இரண்டு அடிகளையும் திரும்பத்திரும்பப் பாடிக்கொண்டு நின்றான் திருவாழி. அவனைச் சூழ்ந்து நின்ற மாணவர்களின் கண்கள் அத்தனையும் ‘உம்’ மென்று முகத்தை வைத்துக் கொண்டு ஒரு மூலையில் நின்று கொண்டிருந்த ஊர்மிளாவை மொய்த்துக் கொண்டிருந்தன.

“டேய், பேஸ் பௌடர் எல்லாம் விலையேறிப் போயிட்டுது ஏன் தெரியுமா......” வேணுகோபாலின் வியாபார ஆராய்ச்சி இது.

“நம்ம மெடிகல் காலேஜிலே மட்டும் மாதம் நானூறு டின் செலவாகுதாம்...” இதுவள்ளி காயகத்தின் புள்ளிவிவரம்.

“இந்த நானூறு டின்லே நம்ம ஊர் மிளகாய்...” அனைவரும் சிரித்தனர்.

“இல்லே, இல்லே மிளகா ஊறுகாய்...” இது முதல் தீர்மானத்திற்கு முரளி கொண்டு வந்த திருத்தம். பின்னும் சிரிப்பு......

மாணவர்கள் ஆரவாரம் கட்டடத்தையே அதிரவைத்தது. அந்த ஆரவாரம் தேய்ந்து வரும்பொழுது கனத்த ‘பூட்சு’ சத்தம் மாடிப்படிகளிலே ‘டக், டக்’ என்று கேட்டுக்கொண்டே வந்தது. ‘‘புரொபசர்’, புரொபசர்’ என்ற முன்னறிவிப்பும், அதையொட்டி ஒரு பரபரப்பும் அந்த ஆய்வுக்களத்தில் ஏற்பட்டன. மாணவர்கள் தங்கள் தங்கள் இடங்களை நோக்கி போய்க் கொண்டிருந்தனர். பியூன் பொன்னம்பலம் ஓடி வந்து கரும்பலகை, மேசை, நாற்காலிகளை துடைத்துக் கொண்டிருந்தான். சிறிது நேரத்திற்கெல்லாம் சிரித்த முகமும், கையில் விரித்த ஏடுமாக டாக்டர் கோலப்பன் துண்டு சிகரெட்டை தூர எறிந்துவிட்டு ஆய்வுக்களத்தினுள் நுழைந்தார்.

டாக்டர் கோலப்பன் மருத்துவக் கல்லூரி பேராசிரியராக பதவி ஏற்று ஏறத்தாழ ஒரு மாதம்தான் இருக்கும். அதற்குள் அவர் மாணவர்களின் உள்ளத்தையும், பிற ஆசிரியர்களின் மனதையும் கவர்ந்து கொண்டார். அவருடைய விரிவுரைகளிலே இடம் பெறாத பொருளே உலகத்தில் இல்லை. தத்துவம், தர்க்கம், உளவியல், பொருளியல், இயைபுநூல், வரலாறு, பூமிநூல், வானநூல் இலக்கியம் இவைகளோடு காதற்கதைகள், நகைச்சுவை துணுக்குகள் அத்தனையும் அவர் பேச்சிலே இடம்பெறும். ஐயப்பாடுகள் ஏதேனும் எழுந்தால் உடனே தீர்த்துக்கொள்வதற்கு அனைவரும் டாக்டர் கோலப்பனிடமே ஓடிவருவார்கள். பரந்து விரிந்து பண்பட்ட அவர் அறிவும், ஒழுக்கமும் உயரிய பண்பாடும் அவர் வளர்ச்சிக்குத் துணைநின்றன. மேலே இருந்து யாராவது இழுத்தோ, கீழே இருந்து யாராவது உயர்த்திவிட்டோ உயர்ந்தவர் அல்ல. “தன் கையே தனக்குதவி’ என்ற தத்துவத்தை வாழ்க்கையின் அடிப்படையாக ஆக்கிக் கொண்டு முயற்சியின்மூலம் முன்னேறியவர். அவரொன்றும் பிறக்கும்போது செல்வக் குடியில் பிறக்கவில்லை; பாவம் ஒரு ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியரின் மகனாகத்தான் பிறந்தார். கன்னியாகுமரி மாவட்டத்தில் சோழபுரம் என்ற சிற்றூர்தான் அவர் சொந்த ஊர். ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியர் என்றவுடனேயே புராணகால குசேலர், தரித்திரநாராயணர் ஆகியோர்தான் நம் கண்முன்னே காட்சியளிப்பர். அந்த ஏழ்மையின் விளைநிலத்திலே பிறந்து இன்று ஏற்றத்தின் உச்சியிலே வீற்றிருக்கும் கோலப்பனின் வாழ்க்கை வரலாறு குறள் தந்த கோமானின் ‘முயற்சி மெய்வருத்தக் கூலி தரும்’ என்ற பொன்மொழிக்கு ஒரு இலக்கியம். ‘பள்ளிப் படிப்பு புள்ளிக்கு உதவாது’ என்ற விசித்திர பழமொழியின் விளைவு தானோ என்னவோ அந்த ஊரின் பக்கத்தில் பத்து மைல் சுற்றளவில் பிள்ளைகளின் படிப்பு ஆரம்பப்பள்ளியோடு, அதையும் தாண்டினால் இடைநிலைப் பள்ளியோடு, அதற்கும் அப்பால் பத்தாவதைக்கூட எட்டிப் பிடிக்காத நிலையில் உயர்நிலைப் பள்ளியில் பாதியிலேயே முடிந்துவிடும். வயலுக்கு கஞ்சி கொண்டுபோகவும், வரப்போரத்துக்கு மாடோட்டிச் செல்லவும், புல்லறுக்கவும், சாணி பொறுக்கவுமே அவர்களுக்குப் பொழுது சரியாக இருக்கும். ஆனால் கோலப்பனின் தந்தைக்கு எப்படியோ ஒரு எண்ணம் பையனை கல்லூரியில் படிக்கவைத்து விடவேண்டுமென்று உதயமாயிற்று. அதற்கும் காரணம் இல்லாமலில்லை. அந்த ஊருக்கு வருகிற அறிக்கைகள், வழக்கு விவகாரங்கள், சம்மன்கள் அத்தனையும் விளக்கம் பெறுவதற்காக வாத்தியார் வீட்டுக்கே—அவர் வீட்டை வாத்தியார்வீடு என்றே சொல்வார்கள்—வரும். அவருக்குத் தெரிந்த அளவிற்கு திறமையோடு விளக்கம் சொல்லி அனுப்புவார். ஆனால் சில அறிக்கைகள் அவருடைய ஆங்கில அறிவுக்கு தேர்வு நடத்துபவைகளாக வந்துவிடும். உடனேயே ‘ஆங்கில—தமிழ் கையகராதி’ ‘ரென் அண்ட் மார்ட்டின் இலக்கண நூல்’ ஆகியவற்றை எடுத்து வைத்துக் கொண்டு அறிக்கையை அலசி அலசி ஆராய்ந்து விளக்கம் கூறுவார். இத்தொல்லையிலிருந்து விடுதலை பெறவேண்டும் என்ற எண்ணமும், தனக்குப் பிறகும் பாமரர்களின் தொல்லைகளைத் துடைக்கின்ற அளவிற்காவது போதிய அறிவு மகனுக்கு வேண்டும் என்ற எண்ணமும்தான் அவரை தன் நிலைமைக்கும் வரவுக்கும் மிஞ்சிய படிப்பான கல்லூரி படிப்புக்கு மகனை அனுப்பத் தூண்டின.

நாகர்கோவில் கிறித்துவக் கல்லூரியில் இடைநிலை வகுப்பின் முதல் தொகுதியில் இடம் கிடைக்காதகாரணத்தால் விஞ்ஞானம் பாடங்களை எடுத்து இரண்டாவது தொகுதியில் சேர்ந்து படித்தான். வறுமையில்தான் அறிவு வளரும் என்பதற்கு பண்டைத் தமிழ்ப் புலவர்களின் வாழ்க்கையோடு கோலப்பனின் வாழ்க்கையையும் சான்றாகக் கூறலாம். படிப்பில் குறிப்பிடத்தக்க அளவு முன்னேறியிருந்தான். பல்கலைக்கழகத் தேர்வின் முடிவில் பல்கலைக்கழகத்தில் முதல்வன் என்று அறிவிக்கப்பட்டு பரிசுகளும், பாராட்டுகளும் பெற்றான். மகனை ‘அவையகத்து முந்தியிருக்கச்செய்ததன்மூலம் தன் கடமையை நிறைவேற்றியதாக தந்தை பூரித்தார்.’

கிறித்துவக் கல்லூரி முதல்வராக பணியேற்றிய ஒரு ஆங்கிலேயர் கோலப்பனின் தந்தையை அழைத்து மகனை மருத்துவக்கல்லூரிக்கு அனுப்புமாறு வேண்டினார். தன் ஏழ்மை மகனது மருத்துவப் படிப்புக்கு ஈடுகட்டாது என்று எடுத்துக்கூறி மறுத்தார். சிறப்புப் பரிசும், நல்ல மாணவன் என்ற காரணத்தால் அரசாங்கம் தரும் நிதி உதவியும் கோலப்பனின் மருத்துவப் படிப்புக்கும் போதுமானவை என்று விளக்கம் கொடுத்தார் அந்த வெள்ளைக்காரர். ஆரம்பப் பள்ளி ஆசிரியரும் அரைகுறை மனதோடு ஒத்துக் கொண்டு வந்தார். எப்படியோ சென்னை மருத்துவக் கல்லூரியில் இடம் பெற்ற கோலப்பன், ஆயிர ரூபாய்களையும் அரைக்காசாக மதிக்கும் மாணவர்கள் மத்தியில், ஒரு காசை ஓராயிரம் ரூபாயாக மதித்து செலவு செய்து ஐந்து ஆண்டுகளைக் கடந்து பட்டமளிப்புவிழாவில் எம். பி. பி. எஸ். பட்டத்தையும் பெற்றான். உடனேயே சென்னை அரசினர் மருத்துவ நிலையத்தில் துணைமருத்துவர் வேலையும் கிடைத்தது. பணத்தை தண்ணீராகக் கொட்டி தன்னை ஆளாக்கிவிட்ட பெற்றோர்கட்கு மாதம் இருபத்தைந்து ரூபாய் அனுப்புகின்ற நிலை கிடைத்ததுபற்றி அகம் மிக மகிழ்ந்தான் டாக்டர் கோலப்பன்.

தொழிலில் திறமையோடு பணியாற்றிய காரணத்தால் அமெரிக்க ராக்பெல்லர் நிறுவனத்தின் நிதி உதவி பெற்று அமெரிக்க பல்கலைக்கழகத்தில் மூன்று ஆண்டுகள் படிக்கச் சென்றான். அது முடிந்ததும் இராணுவத்திற்கு அவன் சேவை தேவைப்பட்டது. உலகப்போரை தோற்றுவிக்குமா என்று அகில உலகமும் அச்சமும் ஆவலும் அலைமோத தன் அகன்ற விழிகளால் பார்த்துக் கொண்டிருந்த கொரியாவுக்கு இந்திய ராணுவம் டாக்டர் கோலப்பனையும் உடன் கொண்டு சென்றது. இராணுவத்திலிருந்து விடுதலைபெற்ற சென்னை மருத்துவக் கல்லூரி பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார் டாக்டர் கோலப்பன். உலகம் சுற்றியதால் ஏற்பட்ட அனுபவம் அவருக்கு அறிவுச் சுரங்கமாக பயன்பட்டது.

கழுத்துப் பட்டையை இழுத்துவிட்டவாறு, மேடையின்மீது அங்கும இங்கும் உலாவிக்கொண்டே அன்று நடத்த வேண்டிய செயல்முறை வகுப்பின் திட்டங்களை விளக்கினார். மாணவர்களும் ‘சித்திரப் பாவையின் அத்தக வடங்கி’ அவர் விரிவுரையை உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருந்தார்கள். உடம்பின் கண்டத்தினுள்ளிருக்கும் இருதயம், ஈரல், குடலமைப்பு, ஆகாரம் சேமித்து வைத்திருக்கும் இடம், நரம்புகளின் அமைப்பு, எலும்புகளின் சேர்க்கை இவைகளைக் குறித்தெல்லாம் விளக்கமான முறையில் அவர் ஆற்றிய சொற்பெருக்கு மாணவர்களின் கவனத்தை முற்றிலும் ஈர்த்திருந்தது. வகுப்பு முடிந்ததும் செயல்முறைப் பகுதியை ஆரம்பிக்குமாறு பணித்தார். மேசைக்கு நான்கு மாணவர்கள் விதம் அறுவைக்குரிய கருவிகளோடு தயாராக நின்றனர். அவர்கள் முன் மேசை மேல், பாடம் செய்யப்பட்ட இறந்துபோன மனிதஉடல்கள் வைக்கப்பட்டிருந்தன.

ஆய்வுக் களத்தினுள்ளே சுற்றிச்சுற்றி வந்து அறுவை செய்யவேண்டிய முறைகள், கருவிகளை கையாளவேண்டிய வழிகள், உடலிலிருந்து பிரித்தெடுக்கப்படவேண்டிய உறுப்பு, அவ்வுறுப்புக்களின் தன்மை இவைகளைக் குறித்தெல்லாம் தனித்தனியே மாணவர்களுக்கு விளக்கம் கொடுத்துக் கொண்டிருந்தார். டாக்டர் கோலப்பன் பதினெட்டாவது என்

மேசையை அடுத்துக் சூழ்நின்ற மாணவிகட்கு விளக்கமாக, நடத்தவேண்டிய அறுவைக் குறித்து எடுத்துக் கூறிவிட்டு, கையில் அறுவைக்குரிய கருவிகளைத் தாங்கியவாறு பிணத்தின்மேல் மூடப்பட்டிருந்த துணியை விலக்கினார். அந்த பிணத்தைப் பார்த்ததும் திகைத்தார், உற்று நோக்கியதும் திடுக்கிட்டார். அந்த பிணமே எழுந்து அவர் முகத்தில் 'அடித்துவிட்டது போல அவர் முகம் வெளறியது. சுருங்கச் சொன்னால் டாக்டர், அப்பொழுது டாக்டராக இல்லை. சாவுக்கும் வாழ்வுக்குமிடையே போராடிக் கொண்டிருக்கும் ஒரு நோயாளியின் நலிந்த உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் திகில் அவர் முகத்திலே தாண்டவமாடியது. கைக்குட்டையை எடுத்து முகத்தைத்துடைத்தவாறு இல்லை, மறைத்தவாறு ஆய்வுக் களத்தை விட்டு வெளியே வந்தார். 'பியூன்' என்ற அவர் குரலை அந்த அறையின் சுவர்கள் பயங்கரமாக எதிரொலித்தன. வழக்கத்திற்கு மாறாக உரத்த குரலைக் கேட்ட பியூன் உதறலெடுக்கும் உடலோடு வந்து நின்றான்! "பதினெட்டாம் எண் பிணத்தை எடுத்து உள்ளே தனியாக வை. அவர்களுக்கு வேறு பிணம் கொண்டு கொடு. இந்த கடிதத்தைக் கல்லூரி அலுவலகத்தில் கொடு. டாக்டர் வேணுவை வகுப்புக்கு வருமாறு சொல்!" என்று கூறி ஒரு கடிதத்தை எழுதி அவன் கையில் கொடுத்துவிட்டு காரை நோக்கி நடந்தார், பச்சைநிற பியட்கார் ஒன்று கல்லூரியை விட்டுப் பறந்தது.

தாய் பரிவோடு தந்த காப்பியோ, தந்தை "ஏன் இவ்வளவு முன்னதாக...?" என்றுகேட்ட கேள்வியோ டாக்டரின்கவனத்தைக் கவரவில்லை. அறையினுள் சென்று மின் விசிறியைச் சுழலவைத்தார். மேசையின் மீது அடுக்கி வைக்கப்பட்டிருந்த தாள்கள் அறையினுள் பறந்து பரந்தன. அதுபோல்தான் அவர் பார்த்த பிணம் அவர் உள்ளத்தில் உருவாக்கிய தடுமாற்றம் அவர் நெஞ்சின் ஆழத்தில் அடுக்கிவைக்கப்பட்டிருந்த நிகழ்ச்சிக் குறிப்புக்களை வெளியே எடுத்து வீசியது. பிணம், இதற்குமுன் அவர் சந்திக்காததல்ல. ஆயிரக்கணக்கில் பிணங்களைப் பார்த்திருக்கிறார். பிணமாகவேண்டியிருந்த எத்தனையோ நோயாளிகளை மனிதர்களாக மாற்றியிருக்கிறார். ஆனால்—இன்று அவர் பார்த்த பிணம் அவைகளுக்கெல்லாம் ஒரு விதிவிலக்காக இருக்கக் காரணம்? அந்த காரணம். என்ற திரையின் பின்னே ஒளிந்துகொண்டிருக்கிறது ஒரு கதை!

அழகிய பாண்டிபுரம், நாஞ்சில் மாவட்டத்தில் ஒரு சிற்றூர். பச்சைக் கம்பளத்தை விரித்தாற்போல் பச்சைப்பசே

# சீறிப் புறப்படு!

"ரவி"

அடிமையில் வாழ்ந்தோம்—மொழி
அழித்தே யொழிக்கப் பழிச்செயல் செய்தார்
கொடுமையில் தாழ்ந்தோம்—நம்
பல்வளம் யாவையும் கொள்ளை யடித்தே
மிடுமையில் ஆழ்த்தினர்—கொடும்
வறுமை நொறுக்க வருந்தினேம் நெஞ்சம்!
விடுதலை வேட்கையால்—அந்த
ஆங்கிலர் தங்களைப் பொங்கித் துரத்தினேம்!

தென்னகம் தன்னிலே—உயிர்
விடுதலை கொள்ளக் கொடுவாள் எடுத்தே
பன்னரும் ஆங்கிலர்—தம்
படையணி தொன்றே கவியணி பெற்ற
முன்னரும் வீரன்—நம்
தாயக கட்ட நாயக பொம்மன்
தன்னை நினைவில்—நீ
நிறுத்தித் தமிழா! உறுதியே கொள்வாய்!

செக்கை இழுத்தார்—கொடும்
சோதனை செய்ததால் வேதனை கொண்டும்
சிக்கெனக் கொண்ட—உயிர்
விடுதலை எண்ணம் உயர்வெனக் கொண்டு
சக்கையாய் கொன்றும்—தன்
உளத்தையே நாட்டின் நலத்திற் பதித்து
மிக்குயர் வெய்தினுர்—நம்
சுதந்திரத் தந்தை சிதம்பர அண்ணல்!

முத்து நிகர்த்தார்—உயிர்ச்
சொத்துகள் எத்தனை நித்தமும் ஈந்தோம்!
செத்தும் கொடியினை—தம்
சித்தத் திலுன்றிய வித்தகர் எத்தனை?
மொத்தும் தடியினுல்—தம்
உடலம் ஒடிந்தும் உளமே ஒடியா
எத்தனை மக்கள்—தம்
சித்தம் குமுறியே ரத்தம் சொரிந்தனர்!

இந்த நிலையினை—வடவர்
சிந்தை மறந்ததால்! நிந்தனை செய்கிருர்!
செந்தமிழ் கொன்றே—கொடும்
செந்தீ நிகர்அழி இந்தி நுழைத்திட
முந்தி எழுந்தனர்—உன்
முத்தமிழ் வீரமும் செத்ததோ வாராய்!
விந்தைத் தமிழகம்—தரும்
வீரத் திருவிழா சீறிப் புறப்படு!

மொழியினைக் காப்போம்—அதைத்
தடுப்பவர் யாரும் மடிவரிம் மண்ணில்!
அழிவினை ஆக்கோம்—எனில்
நெருப்பினில் எமை எரித்திட எண்ணிடில்
கொழுந்தியே சாய்ப்போம்—இக்
கொழுத்தவர் சாகக் குவலயம் வெல்வோம்!
விழுப்புண் பெறவே—தமிழ்
வீரர் அனைவரும் வாரீர் விரைந்தே!

அடிமையில் வாழோம்—இனி
வடவரின் காலின் அடிதொழத் தாழோம்!
கெடுத்தது போதும்—அட
வடநாட் டவனே! இறக்குமுன் ஓடு!
அடுத்தது போரெனில்—உன்
கனக விசயச் சரிதம் நினைப்பாய்!
விடுதலை எம்முயிர்—அதை
ஒடுக்கிட வந்தார் துடித்தே இறப்பார்!

லென்று பரந்து விரிந்து இ
கும் வயற்காட்டின் நடு
பாம்பு போகும் பாதைபோ
வளைந்து நெளிந்து கிடக்
பன்னிரண்டு கல் தொலைவுள்
ஒரு சாலை நாஞ்சில் தலைநக
நாகர் கோவிலோடு அந்த சி
றூரை இணைக்கிறது. அ
நீண்ட சாலையினின்று அழ
பாண்டிபுரத்தில் பிரிந்து செ
லும் கிளைப்பாதை ஒன்று
ண்டு குன்றுகளைத் தாண்
ஒரு உயர்ந்த மலையை
தொட்டு ஓடி காட்டுப்புது
என்ற சிற்றூரை அடைகிற
ஏறத்தாழ எழுபது வீடுக
மட்டிலுமே உள்ள அந்த சி
றூர் இயற்கையன்னையி
விளையாட்டுத் திடலாக விள
குகிறது. அந்த ஊரைச் சுற்
பரந்து கிடக்கும் வயல்வெ
யும், வயல்வெளியினூடே ச
சலத்தபடி, சதங்கை ஒ
போல இசைபாடி ஓடும் வா
கால்களும், அந்த வாய்க்கா
களுக்கு தண்ணீர் தரும் வா
களும் குளங்களும, அ
குளங்களிலே பூத்துக் குலு
சிரித்துக்கொண்டிருக்கும த
ரையும் ஆம்பலும், இவைகளு
கெல்லாம் அப்பால் பச்
நிறம் படுதா கட்டியதுபோ
நாற்புறமும் காட்சியளிக்
உயர்ந்த மலைகளும் அ
ஊரின் அழகுக்கு அணிசெ
வன. விடுமுறைக் காலங்க
லெல்லாம் கோலப்பனுக்
விருந்துதரும் சிற்றூர் அ
அவன் தாத்தா அங்கே சி
டும் சிறப்போடும், வலிவோ
பொலிவோடும் வாழ்ந்த க
ணத்தால் அவர்பேரன் என்
அறிந்த ஊரார் கோலப்பனிட
அன்பும் அக்கரையும், மதிப்
மரியாதையும் காட்டின
அமைதியான சூழ்நிலையு
அழகு நடனமிடும் வயல்வெ
யும் அவனைக் கவர்ந்ததி
ஆச்சரியமில்லை. சின்னஞ்சி
குழந்தையாக அவன் சிரித்
விளையாடிய காலத்திலும், ப
ளிப் பிள்ளையாக துள்ளி
திரிந்த நேரத்திலும் கல்லு
மாணவனாக மெள்ள நட
வேளையிலும் விடுமுறைக் கா
த்தை செலவிட விருப்போ
அவன் தேர்ந்தெடுத்த இட
அந்த சிற்றூர். கள்ளமில்
உள்ளத்தோடு பழகுகின்
அந்த பட்டிக்காட்டுவாசிகளி
அன்பிலே புதிய சுவை க
டான். அந்த அன்பில் திளை
தான். ஆனால் இப்பொழு
அந்த எழில்குலுங்கும் பூமின
இன்பம் ததும்பும் சிற்றூர
அன்பால் குளிப்பாட்டும்
களை அவன் சந்தித்து ஆண்
கள் பல ஓடிவிட்டன. மரு
துவக் கல்லூரியில் சேர்
பிறகு ஓரிரு ஆண்டுகள்
டுமே அந்த ஊரோடு அவ
உறவுகொள்ள முடிந்த
அதன்பிறகு கல்லூரிப் பாட
களும், அயல்நாட்டுப் படிப்பு
மேற்கொண்டபணிகளும், அ
னுக்குப் போதிய ஓய்வையு
அந்தஓய்வை அந்த சிற்றூரி
செலவிடுவதற்குத் தேவை
யான நேரத்தையும் தரவில்
அந்த ஊர் அவன் வாழ்க்

லாற்றில் ஒரு சுந்தரத்திருப் த்தையும் அதனபிறகு ஒரு ாக நிழலாட்டத்தையும் ஏற் த்தும் என்று அவன் எதிர் ர்க்கவில்லை.

இடைநிலை வகுப்பில் அவன் க்கின்ற நேரத்தில் வேனில் டுமுறையின்பெரும்பகுதியை ந்த ஊர் விழுங்கிவிட்டது. ப்பொழுது ஒருநாள் மாலை, ஞ்சள் வெயில் படரும் வேளை, ண்டு நெளிந்து ஓடும் சாலை, ைத் தொட்டு நெருங்கிக் ொண்டிருக்கும் சோலை இவற் ன் அழகில் வழக்கம்போல் மிழந்தான் இக்காளை. தனி மையிலே இனிமை காண ரும்பிய கோலப்பன் அந்த லையிலே நடந்துகொண்டே ருந்தான். அந்த சிற்றூரின் ருகில் ஒரு தோப்பு, அவன் த்தாவின் சொத்து. அந்தத் ோப்பில் கமுகும் தென்னை , பலாவும் மாவும், மாதுளை கொய்யாவும் சேர்ந்து லை இரவாக்கிக்கொண்டிருந் ன. தோப்பினுள்ளே ஒவ் ொரு பகுதியாக பார்த்துக் ொண்டுவந்த அவன் ஒரு மரத்தின் அடியில் வந்து ன்று நிமிர்ந்து பார்த்தான். ண்டு மூன்று மாங்கனிகள் வன் தலையில் விழ்ந்தன. ணியின் சேட்டையோ?' று எண்ணியவாறு அண் ந்து பார்த்தான். மரத்தி ருந்து ஒரு மின்னல் உருகி ழ விழுந்தது. அதன் ஒளி ில கண்ணை மூடிக்கொண்ட வன் மீண்டும் விழிகளைத் றந்து பார்த்தபோது, உரு பாய்ந்த மின்னல் ஒரு ண்ணுருக்கொண்டு நிற்ப தக் கண்டு திகைத்தான். ங்கனி தலையில் விழுந்த தலையும், மின்னல் மங்கை நக்கொண்ட வியப்பும், கண் க்கு விருந்தாக நிற்கும் அழ அவனைத் திணற அடித் . எப்பொழுதுமே ஏற்ப த ஒரு புல்லரிப்பு அவன் லில், எந்நேரத்திலுமே எற் டிராத நடுக்கம் அவன் குர , என்றுமே சுவைத்திராத இன்பம் அவன் இதயத் ஆட்சி செய்தது.

நீ.........நீ.........நீ........." லப்பனின் குரல்வளையைத் ண்ட வார்த்தைகள் தயங் .

இரண்டுதாங்க படிச்சேன், க்கும் என் தம்பிக்கும். ிமேல் கேட்காது வரமாட் னுங்க. மன்னிச்சுக்குங்க" டிவிட்டோமே என்ற வெட் அகப்பட்டுக் கொண் ோமே என்ற அச்சம், இந்த உணர்ச்சிகளின் ஆட்சி உடலும் உள்ளமும் நடுங்க நியபடியே பேசினாள்.

இல்லை, நீ யார்.....?" பதட் குறைந்திருந்த அவன் ச்சிலே பரிவு தொனித்தது.

சேரி செங்கோடன் மகள் ." திகில்குடிகொண்டிருந்த வள் உள்ளத்தில் தெளிவு பட்டதற்கு அத்தாட்சி ு.

"அடடே! நம்ம செங்கோடன் மகளா நீ! செங்கோடனுக்கு இவ்வளவு பெரிய மகளிருக்கிறாளா? ......ஆமா, உன் பெயர்."

"செந்தாமரை......" நாணம் தலை கவிழச் செய்தது. நாக்கு பெயரை சொன்னது.

"ஆகா! பொருத்தமான பெயர். சிற்றூர்களிலே தான் தன் குழந்தைகட்கு செந்தமிழில் பெயர் சூட்டி மகிழும்பண்பு நிலைபெற்றிருக்கிறது. நீ மட்டும் பட்டணத்தில் பிறந்திருந்தால் ஒரு பாமாவாகவோ, பகிரதியாகவோ, மாறியிருப்பாய்......" பாராட்டிதழ் படித்தான் கோலப்பன்.

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய நான்கு பண்புகளும் நிலம்நோக்கி நின்ற அவளை தலை தூக்கச் செய்யவில்லை.

"ஏன் செந்தாமரை, படித்திருக்கிறாயா?"

"எட்டாவது......"

"அடடே, பரவாயில்லையே! எட்டாவதுவரை படித்திருக்கிறாயா. அப்புறம் ஏன் படிக்கவில்லை..." ஆராய்ச்சியில் ஈடுபட்டான் கோலப்பன்.

"பணமில்லை, படிக்கவில்லை"

"அது சரி, நீ என்னை யாரென்று கேட்கவில்லையே......" பீடிகை போட்டான். அவள் சித்தரித்தாள், ஓரக்கண்ணால் அவன் உயரத்தை அளந்தாள், உள்ளத்தையும் ஊடுருவிப் பார்த்தாள். அவனே தொடர்ந்தான்.

"இந்தத் தோப்புக்கு சொந்தக்காரன். மேடைவீட்டு சுப்பையா பிள்ளை பேரன்......... கோலப்பன்! கல்லூரியிலே படிக்கிறேன். என்னை உனக்கு பிடிச்சிருக்குதா?" அவன் உள்ளத்திலே ஊசலாடிக் கொண்டிருந்த எண்ணம் எப்படியோ வெளியேறி விட்டது. அவள் முகத்திலே பயத்தின் கோடுகள் படர்ந்தன.

"வேண்டாங்க, நாங்க ஏழைங்க. சேரியிலே வாழுற வங்க....கெடுத்துடாதிங்க...." அவள் இதயத்தில் இடம் பெற்ற பயத்தின் எதிரொலி. அவன் சிரித்தபடியே பேசினான்.

"சேரி என்றால் என்ன? கேவலமான இடமா? மக்கள் சேர்ந்து வாழுகின்ற இடம் சேரி. புதுச்சேரி, தலைச்சேரி, இவையெல்லாம் கேவலமான இடங்களல்லவே? காலப்போக்கில் பிறர் உழைப்பை உண்டு வாழும் உலுத்தர்கள் காரணப் பெயரான சேரியை, உழைத்து தேயும் மக்கள் ஒதுங்கி வாழும் இடத்திற்கே உரிய பெயராக மாற்றிவிட்டனர். உயர்ந்தவர்கள் என்று கருதப்படுபவர்களைப் போலத்தான் அவர்களால் தாழ்த்தப்பட்டவர்களும் இருக்கிறார்கள். வேறுபாடு ஏதும் இல்லையே...?" தலபுராணம், இலக்கண விளக்கம் எல்லாம் அவன் பேச்சிலே தண்ணீர் பட்டபாடு பட்டன. அவள் முகத்திலே வியப்பும், தெளிவும் சதிராடின.

"செந்தாமரை! என்னை நம்பு......" சிரித்தபடியே நெருங்கினான்.

"நான் உங்களை நம்பலாம், நீங்கள் என்னை நம்பலாம் ஆனால் நாடும் மக்களும் நம்மை நம்பவேண்டுமே......!" தயக்கத்தில் பிறந்த கேள்வி.

உறுதியளித்தான், தன் உயிரையே விடுவதாகச் சொன்னான், கையிலடித்தான், கன்னத்தையும் கிள்ளினான். விவரிப்பானேன்.

காதல் வளர்ந்தது. "நிறம் இனம்விட்டே மதம் விட்டே ஆண் பெண் நிலை மட்டும் பொதுவாகப் புடமிட்டுக்கண்ட அறஞ்சொட்டும் சாகாத அருமருந்து; அழகு தமிழ்க்காதல் அவர்களை இணைத்து வைத்தது. நற்றிணையும் நல்ல குறுந்தொகையும் அகநானூறும் இன்னபிற நூல்களும் அவர்களுக்கு வாழ்த்துக்கூறின. அருணன் எங்கே, இந்த அன்புக் காதலர்கள் பிறகு நம்மை சாட்சிக்கு அழைப்பார்களோ என்ற அச்சத்தால் மலைகளுக்குப் பின்னால் மறைந்து கொண்டான். முழுமதி தன் நட்சத்திரத் தோழிகள் புடைசூழ வானவீதியில் தோன்றி செந்தாமரையின் அலைபாயும் நெஞ்சிற்கு நம்பிக்கை ஊட்டியது. இலைகளுக்குப் பின்னால் மரக்கிளைகளிலே மறைந்துகொண்டு பலவகைப்பட்ட பறவை இனங்கள் 'வாழ்க இளங்காதலர்கள்' என்று வாழ்த்துக் கூறின.

"ஐயோ நேரமாகிவிட்டதே!" காதல் மயக்கத்திலிருந்து விடுபட்ட செந்தாமரை மாலையின் மறைவையும், இரவின் வரவையும், உணர்ந்தாள்.

"ஏன், தனியாகப் போக பயமா? நான் துணை வரட்டுமா?" இருளுக்கு அஞ்சும் கோலப்பனின் இதயத்தில் எப்படியோ இடம்பெற்ற தைரியம் தாவிக்குதித்தது இப்படி.

"வேண்டாம், வேண்டாம் நானே போய் விடுகிறேன்...?"

"இல்லை நானும் வருகிறேன்..." விடவில்லை கோலப்பன். மாங்கனிகளை எடுத்து அவள் கையில் கொடுத்தான். செந்தாமரை நடந்தாள் அவள் சிந்தை கவர்ந்தவன் தொடர்ந்தான், கனி தேடி வந்த மங்கை காதல் ஏந்திச் சென்றாள்.

"நம்மை இப்பொழுது யாராவது பார்த்தால்......" அச்சம் ஐயத்தின் உருவில் தலை நீட்டியது.

"ஊரும் சேரியும் உறவு கொள்கிறது என்று அகமகிழ்வார்கள் நல்லவர்களாக இருந்தால்! பொல்லாதவர்களாக இருந்தால் பொச்சரிப்பால் உறுமுவார்கள், முறைப்பார்கள்! அவர்களைக் கண்டு சிரிப்போம், வழிநடப்போம். செந்தாமரை...! காதல் கட்டுப்பாடுகட்கு அப்பாற்பட்ட சக்தி! ஊராரோ, உறவினரோ, உற்றாரோ பெற்றாரோ, சாதியோ சமயமோ அதற்குத் தடை விதிக்க முடியாது! கடல் அலையையும் தடுத்து நிறுத்தலாம் ஆனால் காதல் அலையைத் தடுக்க முடியாது. காற்றில்லாத உலகில் உயிரில்லை. காதல் இல்லாத வாழ்வில் மணம் இல்லை......கண்ணே...! "காதல் அடைதல் உயிரியற்கை! அது கட்டில் அகப்படும் தன்மையதோ? அடிசாதல் அடைவதும் காதலிலே ஒரு தடங்கல் அடைவதும் ஒன்று கண்டாய்! இனி நீ தடுமாற்றம் அகற்றிவிடு! கை நீட்டடி! சத்தியம்! நான் மணப்பேன்!" எதிர்ப்புகளை புன்னகையால் வெல்வோம், இன்ப உலகை அன்பாலே காண்போம்......" இப்படி உறுதி கூறினான்.

"என்னை மறக்க மாட்டீர்களே?" பெண்கள் சந்தேகத்தின் முழு உருவம் என்பதை எடுத்துக் காட்டினாள்.

"கனவிலும் நினைவிலும் செந்தாமரை நிறைந்துவிட்டாள். பொருளின்றி நிழலில்லை நீயின்றி நானில்லை! 'வட்டிலின் முன் தாயாகி, மணந்தான் முன் மலராகி, எட்டி வரும் வினைருக்கு இரும்பாகி வாழும் தூய தமிழணங்கு' நீ! உன்னை என்றும் மறவேன். நேரமாகிவிட்டது, ...நாளை மீண்டும் அதே இடத்தில்......" 'நிச்சயம் காத்திருப்பேன், வருகிறேன்" செந்தாமரை சிரித்தபடி பிரிந்தாள். அவள் செல்லும் வழியையே பார்த்துக் கொண்டிருந்த கோலப்பனும் தன் இதயத்திற்கு ஆறுதல் கூறிக்கொண்டே நடந்தான்.

செந்தாமரை குளிர்மொழி குவளைவிழி, பிடி இடை, அன்ன நடை, பிறைநெற்றி அலை கூந்தல், எடுப்பான தோற்றம் இணையற்ற கவர்ச்சி இத்தனையும் சேர்ந்த ஒரு அழகின் திருஉரு, பருவம் அந்த உன்னத உருவத்திற்குப் புதுமெருகு பூசியிருந்தது. அழகு அவனைக் கவர்ந்தது, பணிவு அவனை இழுத்தது. அன்பு அவர்களைப் பிணைத்தது. செந்தாமரையை சிந்தையிலே தாங்கிவந்த கோலப்பன் அல்லும் பகலும் அவள் நினைவிலேயே உயிர்வாழ்ந்தான். நாள்தோறும் அந்த பசுஞ்சோலையும், பாழடைந்த மண்டபமும் இவர்கள் காதல் மொழிகளைக் கேட்டு எதிரொலித்தன. அவைகளுக்கு மட்டும் இதயமும் எழுதும் ஆற்றலும் இருந்திருந்தால் எத்தனையோ பல காதல் இலக்கியங்களை எழுதிக் குவித்திருக்கும். விடுமுறைக் காலம் விரைவில் ஓடி மறைந்தது. இருவர் இதயத்திலும் வேதனை பிறந்தது. மீண்டும் சிறுசிறு விடுமுறைகள் அந்த இளங்காதலர்களை இணைத்து வைத்தன. பிரிவும் ஊடலும் அவர்கள் உறவை வளர்த்தன.

ஓலைகளும் கடிதங்களும் ஓடி ஓடி தூதுகூறின. காலம் சுழன்றது; காதலும் வளர்ந்தது திருமணத்தில் சங்கமம் ஆக இருந்த அவர்கள் காதல் கோலப்பனின் மருத்துவக் கல்லூரி படிப்பால் தடைபட்டு நின்றது.

எம். பி. பி. எஸ். பட்டம்பெற்றதும், அமெரிக்கா மேற்படிப்புக்கு அவனை அழைத்துக் கொண்டதும், படை வரிசை அவன் பணியை நாடியதும் அவர்கள் உறவை பலவீனப் படுத்தின. எப்பொழுதோ ஓரிரு சமயங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்ட கடிதங்கள் மட்டிலும்தான் அவர்கள் உறவுக்கு சான்றுகொண்டு நின்றன. இப்பொழுது டாக்டர் கோலப்பன் நாஞ்சில் நாட்டுக்குப் போய் பல ஆண்டுகளும் கழிந்துவிட்டன. சென்னையில் பேராசிரியர் பணி ஏற்றபிறகு ஓய்வே கிடைக்கவில்லை. அவனுக்கு உள்ளம் ஒன்று இருப்பதையும், அதில் ஒருத்தி குடியேறி விட்டதையும், அவள் அதற்காகவே ஏங்கிக் கொண்டிருப்பதையும் அறவே மறந்து விட்டான். ஆனால் இன்று அந்த பிணம் அவன் உணர்ச்சிகளைத் தூண்டி விட்டது, உள்ளத்தையும் திறந்து விட்டது. ஆம்! அந்த பிணம்......?

ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருந்த டாக்டர் கோலப்பனை தொலைபேசி மணி அலறி அழைத்தது. ஓடிப்போய் குழாயைக் கையிலெடுத்தார்.

ஆமாம்; டாக்டர் கோலப்பன் பேசுகிறேன்.''

''.................''

''யார்? சப்இன்ஸ் பெக்டரா, சரி, சரி, எங்கே!

''.................''

''திருவல்லிக்கேணி போலீசு நிலையத்துக்குத் தானே.........இதோ வந்துட்டேன்.''

டாக்டர் கோலப்பனின் கார் அலறி அடித்துக்கொண்டு போலீசு நிலையத்தினுள் சென்று நின்றது. சப்இன்ஸ் பெக்டர் சம்பந்தம் டாக்டர் கோலப்பனை வரவேற்று இருக்கை கொடுத்தார். சிறிது நேரம் இருவரும் பொதுவாக சில கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். பிறகு இன்ஸ் பெக்டர் தொடர்ந்தார்.

''மூன்று நாட்களுக்கு முன் மெரினு கடற்கரையில் ஒரு பிணம் ஒதுங்கியது. பரிசோதனைமுடிந்த பிறகு அது தற்கொலை என்று தெரியவந்தது. பிணம் உங்கள் மருத்துவக் கல்லூரிக்கே அனுப்பப்பட்டது......'' சம்பந்தம் காப்பி வாங்கி வருமாறு ஒரு போலீஸ் காரனை அனுப்பினர். டாக்டரின் முகத்தில் ஈயாடவில்லை. இன்ஸ்பெக்டர் கதையைத் தொடர்ந்தார்.

''மேலும் அதுபற்றி புலன் விசாரித்து வந்த பொழுது இன்று காலை கடற்கரையில் ஒருபுதரின் பக்கத்தில் ஒரு பழைய சேலையும் அதனுள் ஒரு கடிதமும் இருந்தது. கடிதம் உங்களுக்கே எழுதப்பட்டது என்றாலும் உங்கள் முழு முகவரி அதில் இல்லை'' சம்பந்தம் ஒரு பழைய புடவையையும் ஒரு கடிதத்தையும் எடுத்து மேஜை மீது வைத்தார். கடிதத்தை படிக்க வேண்டும் என்ற ஆவல் டாக்டரின் இதயத்தில் அலைமோதி நின்றது. எனினும் இதயம் கடிதத்தைத் தொட தயங்கியது.

''தாராளமாக கையெழுத்து போட்டுவிட்டு நீங்கள் இவற்றை எடுத்துச் செல்லலாம். இதுகுறித்து நீங்கள் ஏதாவது சொல்ல வேண்டியிருந்தால் சொல்லலாம்,'' என்று கூறியபடியே கடிதத்தை டாக்டர் கையில் கொடுத்தார். அவைகளை வாங்கும் பொழுதே டாக்டரின் கரங்கள் நடுங்கின. விழிகளும் நீரைப் பெருக்கின. கடிதத்தைப் படித்தார் டாக்டர். ''அன்பரே!

சாதிசமயங்களுக்கு அப்பாற்பட்ட நாங்களும், சாதியிலே தாழ்ந்தவள் என்று கருதப் படுகின்ற நானும் காதல் என்ற அடித்தளத்திலே சந்தித்தோம். ஒருமித்த கருத்தும், உள்ளார்ந்த அன்பும் நம் காதலை வளர்த்தன. காலவேகத்திலே நீங்கள் கடல் கடந்து சென்றீர்கள், அயல் நாடுகளிலே பணியாற்றினீர்கள். பெயரும் புகழும்பெற நீங்கள் கொண்ட பெருமுயற்சி இந்தப் பேதையைத் தங்கள் நினைவுத் திரையிலேயிருந்து அழித்துவிட்டதோ என்று நான் எண்ணி கண்ணீர்வடித்த நாட்கள்பல. 'இன்று வருவார் இன்று வருவார் என்று நான் எதிர்பார்த்து ஏங்கி நின்ற நாட்களும் எத்தனையோ? எனினும் சிலபல வேளைகளில் வருகின்ற தங்கள் கடிதங்கள் என் அலைபாய்ந்த உள்ளத்திற்கு பிடிதலையாக அமைந்தன. ''வாளற்றுப் புறக்கென்ற கண்ணும், அவர் சென்ற நாளெறித் தேய்ந்த விரல்'' என்ற திருக்குறள் எனக்காகவே எழுதப்பட்டது போலும், எத இவள் இலக்கிய நடையிலே மேற்கோள் காட்டி எழுதுகின்றாளே என்று ஆச்சரியப்படுகின்றீர்களா? எல்லாம் நீங்கள் கற்றுத்தந்ததை தான், அன் பின் மலைமுகட்டில் நின்று நாம் உறவாடுகின்ற நேரத்தில் எல்லாம் என் இதயத்திலே இலக்கிய சுவையையும் காதலோடு குழைத்து திணித்தீர்கள். அதன் விளைவுதான் இந்த நடை.

தங்கள் வரவையே எதிர்பார்த்து, தங்கள் பிரிவால் வாடி நின்ற என்வாட்டம் பெற்றோர்களின் கவனத்தைக் கவர்ந்தது. நம் உறவு எப்படியோ ஊரார்மத்தியில் அம்பலமாகப் பரவி பிறகு அவர்களால் அவர் தூற்றுகின்ற நிலைமைக்கு வளர்ந்து விட்டது. 'மேடை வீட்டுப்பிள்ளையின் பேரனை மயக்கி விட்டாளே மேல்மினிக்கி' என்று பலர் என் காதுகள் கெட்கும்படியே கேலிபேசினர். ஊரிலுள்ள வாலிபர்களும் என்னை கறை பட்ட கன்னி என்றெண்ணி வட்டமிடலாயினர். சேரியில் பிறந்தவள் தான் நான். அதனால் அந்த சேரிவாழ் மக்களிடம் ஆண்டாண்டு காலமாகப் படிந்துள்ள தூயநெறி, கற்பு வாழ்க்கை என்னை விட்டும் மறந்துவிடவில்லை. ஊராராலும் உற்றாராலும் என் பெற்றோராலுமே வெறுக்கப்பட்டேன். ஊரிலே வாழமுடியாத நிலை ஏற்பட்டது. ஓடினேன், ஓடினேன். என்வாழ்வின் ஒளியைத்தேடி.

சோழபுரம், தங்கள் ஊர்என் சோகக்கதையைக் கேட்டது. அனுதாபமும் காட்டிற்று. சோழ நாட்டுக்கண்ணகி வாழ்வுதேடி பாண்டிய நாடு அடைந்தாள். ஆனால் இந்த பாண்டிபுர செந்தாமரை வாழ்வுக்கு ஏங்கி சோழபுரம் வந்தாள். நீங்கள் பெற்றோர்களோடு சென்னையில் தங்குவதாகச் சொன்னார்கள். யாரோ ஒரு பெரியவர் சென்னை மருத்துவ நிலையத்தில் தாங்கள் பணியாற்றுவதையும் கூறினர். என்னை ஏற்றி வந்த புகைவண்டி அரியலூரையும் தாண்டி சென்னைவந்து சேர்த்தது.

பட்டணத்தின் பரபரப்பும், படாடோபமும் என் உள்ளத்தைக் கவரவில்லை, மாறாக அச்சுறுத்தின. நேராக பெரிய மருத்துவ நிலையம் வந்தேன். வாயிலைத் தாண்டி உள்ளே நுழைவதே பெரும்பாடாகப் போய்விட்டது. பழய காலமாக இருந்தால் 'வாயிலோயே வாயிலோயே' என்று நானும் பாடியிருப்பேன். ஆனால் இது நாகரீகக் காலமாயிற்றே! பாட

# சேலம் தேர்தல் வழக்கு நிதி!

**சேலம் தொகுதி தேர்தல் வழக்கை உயர் நீதி மன்றங்கள் வரை சென்று, சிறந்த வழக்கறிஞர்களைக்கொண்டு, சீரிய முறையில் நடத்த வேண்டி, கீழ்க்கண்டவர்கள் பெருந்தன்மையோடு நிதி தந்து உதவியுள்ளனர். அவர்களுக் கெல்லாம் என் மகிழ்ச்சியும் நன்றியும் வணக்கமும் உரியவாக!**

**—இரா. நெடுஞ்செழியன்**

*26-10-57* பழனி சிறப்புக்கூட்டத்தில்: ரூ. *150-00*; தனிப்பட்டவர்களும் தனி அமைப்புக்களும் ரூ. *8-15*.

*26-10-57* சின்னாளப்பட்டி தி. மு. க. பொதுக் கூட்டத்தில்: ரூ. *5-00*.

*27-10-57* மன்னார்குடி தி. மு. க. பொதுக் கூட்டத்தில் திருத்துறைப்பூண்டி வை. சுப்பிரமணியம் ரூ. *10-00*; வடுவூர் புதுக்கோட்டை தி. மு. கழகம் ரூ. *1-00*; அம்பேத்கார் மன்றம் ரூ. *3-00*; தனிப்பட்டவர் ரூ. *1-00*.

*27-10-57* கொரடாச்சேரி பொதுக் கூட்டத்தில்: கொரடாச்சேரி தி. மு. கழகம் ரூ. *10-14*; தனிப்பட்டவர்களும் தனி அமைப்புக்களும் ரூ. *4-75*.

*28-10-57* வேட்டன் விடுதி தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் ரூ. *4.00*.

*29-10-57* இணங்கனூர் பொதுக் கூட்டத்தில்: இணங்கனூர் தி. மு. கழகம் ரூ. *20-00*.

*29-10-57* தென்னிலை பொதுக் கூட்டத்தில்: தென்னிலை தி. மு. கழகம் ரூ. *5-00*; வெள்ளக்கோயில் தி. மு. கழகம் ரூ. *2-00*; சேர்வக்காரன் பாளையம் தி. மு. கழகம் ரூ. *1-00*.

*29-10-57* கரூர் பொதுக்கூட்டத்தில்: கரூர் பெரியார் உணவு விடுதி ரூ. *5-00*; நரிக்காட்டூர் செல்லப்பன் ரூ. *5-00*; நன்னியூர் தி. மு. கழகம் ரூ. *2-00*; *6*-வது வட்டம் தி. மு. கழகம் ரூ. *4-71*; பெரிய மதியாகூடலூர் தி. மு. கழகம் ரூ. *1-00*; மொச்சைக்கொட்டாம் பாளையம் தி. மு. கழகம் ரூ. *1-00*; உண்டியல் மூலம் ரூ. *28-50*; வேலாயுதம் பாளையம் வை. மாணிக்கம் ரூ. *5-00*.

*30-10-57* திருமானூர் தி. மு. க. பொதுக்கூட்டத்தில்: வடுகபாளையம்—குமாரமங்கலம்—திருமானூர் தி. மு. க. கிளைகள் ரூ. *21-00*; தனிப்பட்டவர்கள் ரூ. *8-00*.

*30-10-57* அரியலூர் தி. மு. க. பொதுக் கூட்டத்தில்: உண்டியல் மூலம் ரூ. *37-47*; தனிப்பட்டவர்களும் தனி அமைப்புக்களும் ரூ. *6-00*.

நிதி அனுப்பவேண்டிய முகவரி:—

**இரா. நெடுஞ்செழியன்,**

93, பிராட்வே, சென்னை-1

# கப்பல் வேலைகள் இந்திக்காரர்களுக்கே!

அரசாங்க மொழியாக இந்தி ஆக்கப்பட்டு விட்டால், கட்டாய இந்தி ஆதிக்கம் பெறும். இந்தி தெரிந்தவர்களுக்கே எல்லா சலுகைகளும் தரப்படும் என்று இந்தியல்லாத மற்ற மொழி பேசுகின்றவர்கள் அஞ்சுகின்றனர். அரசாங்க மொழியாக இந்தி ஆக்கப்படாத இந்த நேரத்திலேயே, டில்லி ஆட்சி பீடம் அரசாங்கத்தில் ஒவ்வொரு பகுதியிலும் நேர்முகமாகவும், மறைமுகமாகவும் இந்தியைக் கட்டாயப் படுத்தி வருகிறது.

தந்தி அனுப்புகிறவர்களுக்கு இந்தி தெரிந்திருக்க வேண்டுமென்று கட்டாயப் படுத்தப் பட்டிருப்பதைச் சென்ற வாரம் "மன்றம்" தலையங்கத்தில் காட்டியிருந்தோம். வர்த்தக இலாகா அனுப்பியுள்ள அறிவிப்பு ஒன்றில், கப்பல் தொழில் மாலுமிகள் வேலைக்கு மனுச்செய்து கொள்கிறவர்களுக்கு இந்தியும் ஆங்கிலமும் தெரிந்திருக்க வேண்டுமாம். இந்திய அரசாங்கத்தின் அறிவிப்பு கீழே அப்படியே பிரசுரிக்கப்படுகிறது.

## மாலுமிகள் பயிற்சி

"விசாகப்பட்டணத்தில் உள்ள பயிற்சிக் கப்பல் மேகலாவில் மாலுமிகள் பயிற்சிக்கு ஆட்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான அடுத்த தேர்வு, சென்னை-1 பழைய ஹைகோர்ட் கட்டடத்தில் உள்ள வர்த்தகக் கப்பல் இலாகாவில் பிரதம அதிகாரி காரியாலயத்தில் 1957 நவம்பர் 4-ந்தேதி காலை 11 மணிக்கு நடைபெறும்.

விண்ணப்பதாரர்கள் 18 வயதுக்கும் 25 வயதுக்கும் உட்பட்டவர்களாக இருக்கவேண்டும். அவர்கள் 5 அடி உயரமும் 105 பவுண்டு கனமும், மார்புச் சுற்றளவு சாதரணமாக 30 அங்குலமும், விரிவடையும்போது 32 அங்குலமும் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

வெளியூரிலிருந்து வருபவர்கள் தங்களுடைய சொந்த செலவில் வரவேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் டெக்ரேட்டிங்குகளாகவும், எஞ்சின் அறை ரேட்டிங்குகளாகவும் பயிற்சியளிக்கப்படுவார்கள். பயிற்சிக் காலத்தில் அவர்களுக்கு இருப்பிட வசதியும், உணவும் இலவசமாக அளிக்கப்படும்.

விண்ணப்பதாராகள் நல்ல தேகக்கட்டு உள்ளவர்களாக இருக்கவேண்டும். சமுத்திர சஞ்சார அனுபவமுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவும், **ஹிந்தியும் ஆங்கிலமும் பேசத்தெரிந்தவர்களாகவும் இருப்பவர்களுக்கு சலுகை காட்டப்படும்.**"

ஆக இனிமேல் ஒருவன் அரசாங்க ஆதரவில் தரப்படும் கப்பல் தொழில் பயிற்சிக்கு மனுச் செய்து கொள்ளவேண்டுமானால், அவன் 18 வயதுக்கு மேல் 25 வயதுக்குக் குறைவாகவும், 5 அடி உயரம், 105 பவுண்டு கனம், மார்புச் சுற்றளவு 30 அங்குலம் இவைகளுக்கு குறையாமல் இருப்பதோடு, இந்தியும் பேசத் தெரிந்திருக்கவேண்டுமாம். ஆக யாரார் இந்த வேலைக்கு வர முடியுமென்றால், உத்திர பிரதேசக்காரனும், மத்திய பிரதேசக்காரனும்தான் வரமுடியும். அவர்களுக்குத்தான் இந்தி பேசத் தெரிந்திருக்கிற காரணத்தால் "சலுகைகள்" காட்டப்படும்.

இதில் வேடிக்கை என்னவென்றால் இந்தியாவை எடுத்துக் கொண்டால், தமிழ், தெலுங்கு, மலையாளம் கன்னடம் பேசுபவர்கள் பகுதிகளில் கடற்கரை இருக்கிறது. மற்றபடி வடக்கில் குஜராத், மராத்தி, வங்காளம், ஒரியா இந்த மொழிக்காரர்களின் மாநிலங்களை அடுத்தும் கடற்கரை இருக்கிறது. இந்தி முக்கியமாகப் பேசப்படுகிற உத்திரப் பிரதேசத்திற்கும் மத்தியபிரதேசத்திற்கும் கடற்கரை என்பது கிடையாது. அங்குள்ள இந்தி பேசுபவர்களில் 100-க்கு 99 பேர்களுக்கு கடல் என்றால் என்னவென்றே தெரியாது. ஆனால் டில்லி அரசாங்க அறிவிப்புப்படி, அவ்வாறு கடலே பார்த்திராத இந்தி மொழிக்காரர்களுக்குத்தான், கப்பல்களைச் செலுத்தும் மாலுமிகள் வேலைக்கு முதற் சலுகை தரப்படுகிறது!

கப்பல் வேலைக்கும் இந்திக்கும் என்ன தொடர்பு என்று புரியவில்லை. "கப்பல் வேலைக்கான கல்வியறிவும் தொழில் நுட்பமும் இந்தி மொழியில் மட்டும்தான் இருக்கின்றன, இந்தி தெரிந்தால்தான் கப்பல் வேலைக்கு நல்லது!" என்ற நிலை உள்ளதா? அல்லது இந்தியில் உளரிக் கொட்டினால்தான் கப்பல் ஓடுமா? நங்கூரம் விழுமா? நீராவியந்திரங்கள் அசையுமா?

இந்தி வெறியர்களின் ஆதிக்கத்தில் இந்திய ஆட்சி சிக்கியிருக்கிறது என்பதைத் தவிர, கப்பல் வேலைக்கு இந்தி தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் எதுவும் கிடையாது!

---

வில்லை அதற்குப் பதிலாக சில காசுகளை வீசினேன். யார்யாரிடமோ தங்கள் பெயரைச்சொல்லிக் கேட்டேன். யாரும பதில் கூறவில்லை. மாணவர்களும், இளம் மருத்துவர்கள் இழுத்து வலித்துக் கொண்டு திரிகின்ற நோயாளிகளும் ஏராளம் இருந்தனர். யாரும் என் கேள்வியின் பொருளைக் கவனிக்கவில்லை. என்மேனியின் தளதளப்பிலே கண்களைமேய விட்டனர், நேரம் இருண்டது. என் உள்ளமும் இருண்டுவிட்டது. மருத்துவ மனையிலேயிருந்து வெளியே துரத்தப்பட்டேன்.

கால்போன போக்கில் நடந்தேன், எங்கேயாவது இரவைக் கழித்து விட்டு காலையிலே உங்களை எடபடியாவது கண்டு பிடிப்பது என்று எண்ணினேன். ஓடிவரும் அலையும் அதைத் தழுவி மகிழும் கரையும் என்கவனத்தைக் கவர்ந்தன. கடற்கரை வழியாக நடந்தேன். ஒரு பெரிய மாளிகையின் திண்ணையிலே படுத்தேன். இரவு நடுநிசியிருக்கும், யாரோ சிலர் என்னை படுக்கையிலிருந்து எழுப்பினர். 'சென்னையிலே மனிதன் மிருகம்' என்று ஏதோ ஒரு திரைப் படத்திலே கேட்டதாக நினைவு. அதை நேராகவே பார்த்தேன். தனியே ஒரு பெண்ணைப் பார்த்து விட்டால் எவ்வளவு எளிதில் மிருகமாகி விடுகின்றார்கள் என்பதையும் கண்டேன். ஓடினேன் அவர்களிடமிருந்து. துரத்தினர் என்னை, உயிருக்கு பயந்து அல்ல என் உடல் கறைபடக்கூடாது என்ற எண்ணத்தினால் ஓடினேன். அல்லது நானும் இப்பொழுது அயோத்தி இராமன் மனைவி சிதையைப் போல்,

"மனத்தினால் வாக்கினால்
மறுவுற்றேனெனின்
சினத்தினால் சுடுதீயால்
தீச் செல்வா..."

என்று கூறி தீக்குளித்துத் தானே என் தூய்மையைக் காட்டிக் கொள்ளவேண்டும்? சீதைக்காவது வாதாடுவதற்கு ஒரு கம்பன் இருந்தான் கவிஞனாக. இந்த ஏழைக்கு வாதாட யார் இருக்கிறார்கள்? எனவேதான் ஓடி ஓடி ஒரு புதரினுள்ளே ஒதுங்கிக் கொண்டு இக்கடிதத்தை எழுதுகிறேன்.

அத்தான்! உங்களை விட்டு நான் பிரிகிறேன். அதற்கு நான் யார்மேலும் குற்றம் சாட்டவில்லை. தங்கள் அன்பு தூய்மையானது, உள்ளம் களங்கமற்றது. எனினும் நாம் வாழ முடியவில்லை! நான் போகிறேன் ஆனால் அதற்கு முன் இவ்வளவு நாளும் ஏன்? இன்றும் என்றும் நம்மிடையே நிலவி வரும் காதலின் பேரால் கேட்கிறேன், எங்கே கைகேயிபோல் பரதனுக்கு பட்டம் சூட்ட கேட்கிறேனோ என்று பயப்படுகின்றீர்களா? இல்லை, இல்லவே இல்லை. தாங்கள் சாதியை வென்றவர்கள், சமயத்தைக் கடந்தவர்களென்று காட்டிக்கொள்ளசமுதாயத்தை சீர்திருத்தும் நோக்கம் கொண்ட தங்கள் செயல் மூலம் புகழ் பெற ஒரு வேண்டுகோள்,

எனக்குப் பிறகு ஒருதாழ்ந்த குலப பெண்ணை திருமணம் செய்து வாழுங்கள். ஆமாம் கலப்பு மணம் புரிந்து கொள்ளுங்கள் என்று கேட்கிறேன். செய்வீர்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு உண்டு. தாங்கள் அடிக்கடி கூறுவீர்களே அந்த அகநானூற்றுப் பாடல் என் நினைவுக்கு வருகிறது.

'யாயும் ஞாயும் யாரகியாரோ
எந்தையும் நுந்தையும்
எம்முறைக் கேளிர்...'

எனினும் எப்படியோ நாம் இணைந்தோம். இன்று பிரிகிறோம்.

அதோ அந்த காதகர்களின் காலடிச் சத்தம் கேட்கிறது. என் உடல் உங்கள் கையில் கிடைக்கலாம் அல்லது கிடைக்காமல் போகலாம். ஆனால் இந்தக் கடிதம் கிடைக்குமென்று எண்ணுகிறேன்; புதரைநெருங்கிவிட்டது அந்த போக்கிரிக் கூட்டம். நான் போகிறேன். தங்கள் திருவடிகளை நினைவில் தாங்கிக் கொண்டு அலைகடலில் அமைதி காணுகிறேன்.

வணக்கம்,
இறந்தும் தங்கள்
சென்தாமரை

கடிதத்தைப் படித்து முடித்தார் டாக்டர். அவரை அறியாமலேயே தான் இருக்கும இடத்தையே மறந்து "ஐயோ செந்தாமரை! இந்தக் காதகனை விட்டுப் போய்விட்டாயே" என்று அலறினார். சப் இன்ஸ்பெக்டர் சம்மந்தம் அவரை சமாதானப் படுத்த பெரும்பாடு பட்டார், டாக்டரின் கண்கள் குற்றால நீர்வீழ்ச்சியாயின. தலையில் அடித்து மோதிக் கொண்டார்.

அன்று மாலை மயிலாப்பூர் இடுகாட்டில் செந்தீ கொழுந்துவிட்டு எரிந்து செந்தாமரையை ஒருபிடி சாம்பலாக மாற்றிக் கொண்டிருந்தது. டாக்டர் கோலப்பன் தனியே கால் போன போக்கில் நடந்து கொண்டிருந்தார். செந்தாமரை கடலில் மூழ்கிய அதே இடத்தில் வந்து நின்றார். விழிகள் அருவியாயின. அலைகள் கரையில் மோதி மோதி எதிரொலித்தன, "வாழ்வும் சாவும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் ஒன்றின் மதிப்பு இன்னொன்றைத் தழுவி நிற்கின்றது. ஒன்று இல்லாமல் இன்னொன்றில்லை" என்ற தத்துவத்தை அந்தக் கடலின் இரைச்சல் அவனுக்குக் கூறியது. கடல் தன் அலைக்கரங்களை வீசி போ, போ, என்று அவனை விரட்டியது. வாழப் பிறந்தவன் நீ! போ கலப்பு மணம் செய்து கொள். சமுதாயம் உன் பணியை, தொண்டை எதிர்நோக்கி நிற்கிறது. 'கோழையாகாதே செந்தாமரையின் கடைசி ஆசையை நிறைவேற்று" என்று அலைகள் குமுறிக் கூறின.

விழியில் வழிந்த நீரைத் துடைத்துக்கொண்டு திரும்பிப் பார்த்தார் டாக்டர். அவர் தந்தையும் வேறு சிலரும சாலையின் ஓரத்தில் நின்று கொண்டிருந்தனர். அவர்கள் கண்கள் அத்தனையும் டாக்டரையே பார்த்துக் கொண்டிருந்தன.

○

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் ஒருபுறம் சாவை நோக்கிப் போகிறார்கள், தப்பியவர்கள் பாட்டை நோக்கி மற்றொரு புறம் போகிறார்கள்!"

"வேறு எந்தக் குறையை வேண்டுமானாலும் சொல்! இதில் மட்டும் நமது பாரத அரசாங்கத்தைப் பற்றிச் சொல்லாதே! அவர்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டு சாப்பாட்டுக் குறையைப் போக்க வேண்டுமென்று சொல்லித்தான், திட்டங்கள் ஏராளமாய் போட்டிருக்கிறார்கள்!"

"சாப்பாட்டுக் குறையைப் போக்கவேண்டுமென்று சொல்லித்தான் திட்டங்களைப் போடுகிறார்கள். இதை நான் மறுக்கவில்லை. அப்படித்தான் சொன்னார்கள், சொல்கிறார்கள், இனிமேலும் சொல்வார்கள்! நான் கேட்பதெல்லாம் இப்படிச் சொல்லிக்கொண்டே இருந்தால் போதுமா? ஒன்றும் செய்ய வேண்டாமா?"

"தங்களால் முடிந்தவரைச் செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களுடைய சங்கடங்கள் தெரியாமல், முள்ளு முனையில் மூனுகுளம் வெட்டினேன், இரண்டு குளம் பாழ், ஒன்னு தண்ணியே இல்லை! என்ற பாட்டுப்போல, ஏதேதோ வேடிக்கையாகப் பாட்டுப் போட்டுவிடுகிறாய்!"

"பரவாயில்லையே! இந்தப் பாட்டினுடைய மூலம் உனக்குத் தெரிகிறதே! இந்தப் பாட்டை நான் வேடிக்கைக்காகப் போடவில்லை! முதல் தடவை வேடிக்கையாகப் படித்தாலும், மீண்டும் ஒருதடவை அதைத் திருப்பிப் படித்துபார் டில்லி அரசாங்கம் போடுகிற திட்டங்களில், மூன்றில் இரண்டுபகுதி, மோசமாகி விடுகின்றன! சக்திக்குமீறி திட்டம் போடுகிறார்கள், எதிர்பார்த்த அளவு பலன் கிடைப்பதில்லை!"

"போட்ட அளவு திட்டம் நிறைவேறவில்லையென்றாலும், அதில் புரியாதது என்ன இருக்கிறது?"

"புரியாதது ஏராளமாக இருக்கிறது. பிரதேச அபிவிருத்தித் திட்டங்கள், தேசிய விஸ்தரிப்புத் திட்டங்கள், என்று புதுத்திட்டங்கள் நடத்துகிறார்கள். ஏராளமான பணம் பலவிதமான வழிகளில் செலவாகி விடுகிறது. ஆனால், ஏன் இந்தத்திட்டங்கள் என்று அதிலிருந்து பணியாற்றுகிற பலருக்குத் தெரியாது, அம்பர் சர்க்கா என்று பல கோடி ரூபாய்களை ஒதுக்குகிறார்கள். ஏன் அந்த முயற்சி என்று பலருக்குப் புரியவில்லை, ஆதாரக் கல்வித்திட்டம் என்று அடிக்கடிச் சொல்கிறார்கள். அப்படியென்றால் என்ன? அதன் வளர்ச்சி எப்படியிருக்கும்? அணுச்சக்தி கூடங்களையும், மின்சார நிலையங்களையும், பிரமாண்டமான தொழிற்சாலைகளையும் நிர்வகிக்க அந்த ஆதாரக் கல்வி எந்தவகையில் உதவப்போகிறது? என்று பலருக்குத் தெரியவில்லை. ஆதாரக் கல்வியின் நோக்கம் புரியவில்லையெனப் பல காங்கிரசுக்காரர்களே கூறுகிறார்கள். ஒன்றைப்பற்றிப் புரியாதவர்களும், தெரியாதவர்களும் ஒன்றுகூடி செயலாற்ற முற்பட்டால் பணம் பாழாவதைத் தவிர வேறென்ன கிடைக்கும். தெரியாதிருப்பது அறியாமை, தெரிந்தும் புரியாதிருப்பது குழப்பம்! அறியாமையில் செய்வதைவிட குழப்பத்தில் செய்வது அதிக கஷ்ட நஷ்டங்களைத் தரும்!"

"எதுவும் புதிதாகச் செய்வதில் கஷ்ட நஷ்டங்கள் வரத்தான் செய்யும்."

"கஷ்ட நஷ்டங்கள் வருவதால் சலிப்படைய வேண்டியதில்லை, ஆனால் கஷ்ட நஷ்டங்களை மிகக்கஷ்டப்பட்டு முயற்சி செய்து நாட்டு மக்களுக்குத் தரவேண்டிய அவசியமில்லை! ஒவ்வொரு திட்டத்திலும் எவ்வளவு நேரம் எவ்வளவு வரிப்பணம் வீணாக்கப் படுகிறது என்பதைப் பார்த்தால், மனம் வைத்திருந்தால் படுகின்ற கஷ்டத்தில் பெரும்பகுதியை முன்கூட்டியே தடுத்திருக்கலாம்!

மூன்று கோடி ரூபாய் ஒரு திட்டத்துக்குச் செலவாகிறதென்றால், அதில் திட்டத்துக்கு ஒருகோடி ரூபாயும், திட்டத்துக்காக-அதன் திட்டத்தின்பேரில் இரண்டுகோடி ரூபாயும் செலவாகி விடுகின்றன! திட்டத்தின் அடிப்படை சர்வோதயம் என்று சிலர் கூறுகிறார்கள். சமதர்மம் என்று சிலர் கூறுகிறார்கள். ஆனால் திட்டத்தின் அடிப்படையாக ஊழல் (சர்வ ஊழலோதயம் அல்லது சம ஊழல் தர்மம்) இருப்பது பலருக்குத் தெரிகிறது.

மக்களின் வரிப்பணம் என்பதைப்பற்றி கவனமில்லாமல், வானவேடிக்கைக் காண்பிப்பது போல ஊதாரித்தனமான பல திட்டங்கள் போடப்படுகின்றன.

திட்டங்களைப் போட்டதும், அவற்றை நிறைவேற்றுவதில் மந்திரிசபை கண்ணுங்கருத்துமா யிருக்கிறதா என்றால், இல்லை. ஊர்சுற்றி, வரவேற்பு வைபவங்களில் கலந்து கொள்ளத்தான் அவர்களுக்கு நேரம் சரியாக இருக்கிறது. போட்ட திட்டங்களில் பல சரியாகநிறைவேறாமல் போய்விடுகின்றன."

"சரி! நிறைவேறாத திட்டங்களைப்பற்றி பேசுகிறாயே ஒழிய நிறைவேறிய திட்டங்களைப் பற்றி என்ன சொல்கிறாய்? அங்குகூட ஒன்னும் நடக்கவில்லையென்று குறைத்துக் கூறுகிறாய்? அணைபோட்டாலும், கால்வாய்ச் சரியாக இல்லை, கால்வாய் வெட்டினாலும், கிராமம் வரட்சியாயிருக்கிறது, வயல்கள் தரிசாகக் கிடைக்கின்றன என நீ சொல்வதை ஒப்புக்கொள்ள முடியாது. உணவு உற்பத்தியை அதிகப்படுத்த, நீர்பாசன திட்டங்களுக்குத்தான் நமது பாரத அரசாங்கம் முதலிடம் கொடுத்திருக்கிறது, தெரியுமா?"

"நீர்ப்பாசனத் திட்டங்களில் கூடப் போட்ட அளவு செலவு செய்யப்பட்டதா? செலவான அளவு திட்டங்கள் நிறைவேறினவா? நிறைவேறிய அளவுக்கு பலன்கள் கிடைத்தனவா? கிடைத்த பலன்கள் வீணாக்கப்படாமல் உபயோகப்படுத்தப் பட்டனவா? என்பதைக் கவனிக்கவேண்டும். முதல் ஐந்தாண்டு திட்டத்தில் நீர்ப்பாசனத்திட்டங்களுக்காகச் செலவிடப்பட்ட பணம் 569 கோடி ரூபாய்! இதனால் அவர்கள் எதிர்பார்த்தது, 85 லட்சம் ஏகரா நிலங்கள் பயிராவதற்காக நீர்ப்பாசன வசதி கிடைக்குமென்று! ஆனால் 569 கோடி ரூபாய் செலவான பின், 85 லட்சம் ஏகராவை வளப்படுத்தும் நீர்ப்பாசன வசதி உண்டாகவில்லை, எதிர்பார்த்ததை விடக் குறைந்து, 63 லட்சம் ஏகரா நிலங்களை வளப்படுத்தக் கூடிய அளவுதான் நீர்ப்பாசன வசதி கிடைத்தது! சரி, போகட்டும் கிடைத்த இந்த 63 லட்ச ஏகராவைச் செழுமைப்படுத்தக் கூடிய வசதி பயன்பட்டதா என்றால் இல்லை, அதில் 40 லட்சம் ஏகரா நிலங்கள் மட்டும்தான் பயன்படுத்தப்பட்டன என்று அரசாங்கமே கூறுகிறது! ஆன செலவுக்கு எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை, கிடைத்த பலனையும் சரியாகப் பயன்படுத்தவில்லை! இதற்கு ஒரு அரசாங்கம், திட்டம், செலவு எல்லாம் எதற்கு?"

"இது முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில்! அப்பொழுது முதல் திட்டம், அதிக அனுபவம் இல்லை! இரண்டாவது ஐந்தாண்டுதிட்டத்தில், அந்தக் குறை நீங்கிவிடும்."

"அப்படித்தான் எதிர்பார்த்தோம். ஆனால் இப்பொழுது ஆங்காங்கு இருந்து வருகிற செய்திகள் பழைய நிலை இன்னும் மோசமானதைத்தான் காட்டுகின்றன! ஆந்திரப் பகுதியில் கடப்பா—கர்நூல் கால்வாய்த் திட்டம் என்று ஒரு நீர்ப்பாசனத் திட்டத்திற்கு 4 கோடி ரூபாய் செலவாகிவிட்டது. 4 கோடி ரூபாய் செலவில் அவர்கள் எதிர்பார்த்த பலன், 3 லட்சம் ஏகரா நிலங்கள் பாசனத்துக்கு வரும் என்பது! ஆனால் 4 கோடி ரூபாயில் திட்டம் முடிவடைந்ததும் எவ்வளவு ஏகரா பாசனம் முடிகிறதென்றால், 300 ஏகராதான்! எதிர்பார்த்தது 3 லட்சம், கிடைத்தது 300! அதாவது ஆயிரத்தில் ஒருபங்கு தான் பலன் கிடைத்துள்ளது!"

"ஏன் இப்படிக் குறைந்தது?",

"எப்படி இந்த மோசம் என்பது அரசாங்கத்துக்கும்
தெரியாமலில்லை. செலவ
கப்பட்ட பணத்தில் பெரு
பகுதி ஊழலில் மறைந்
விட்டது. நீர்ப்பாசனத்
டங்களைப் போடும்பொழு
கால்வாயில் தண்ணீர் பா
பங்கு செலவாகிறதென்று
ஊழல் கால்வாயில் இரண்
பங்கு பணம் ஓடி மறைந்
விடுகிறது.

இவ்வளவு ஊழல்களை
ஊதாரிச்செலவுகளையும் தா
மக்கள் வரிசெலுத்த வேண்
யிருக்கிறது, பட்டினிகிடந்
வது வரி செலுத்துகிறார்க
வரிகளெல்லாம் டில்லிப் ப
ணத்தில் குவிகின்றன,
நாட்டில் செலவாகின்றன!
வுக்கு மேல் செலவாக, பெ
திட்டங்களைப்போட்டு அத
வருவாய் தேடமுடியாத நி
யில், கடன் வாங்க அரசாங்
புறப்படுகிறது!"

"இதுவரையில் கூடப் பு
யில்லை. பதினாறுவது பாட்டி
ஆட்சியில் கொள்ளை என்
சொல்கிறாயே, அது எப்படி

"கொடுமை செய்து அரசா
கம் வசூல் செய்கிற பண
கொள்ளையடிக்கப் பட்டதா
தான் கருதப்படும். இத
வள்ளுவர் தெளிவாகக் கூ
யுள்ளார்.

வேலொடு நின்றான் இடுவென்
றதுபோ
கோலொடு நின்றான் இரவு.

கொள்ளைக்காரன் வழிப்போ
க்கர்களை மறித்துக் 'கொடு' எ
அதட்டுகிறான். கொடுமை
கார ஆட்சியாளர் 'வரியை
கொடு' என மக்களை மடக்
கிறார்கள். வழிப்பறி செய்
கொள்ளைக்காரன் தன
கொடிய வேலைக் காட்டுகிறா
வரிக்கொடுமையை நிறை
வேற்ற, அரசாங்கம் கொடு
கோலைத் துணைகொள்கிற
மக்களைக் கொடுமைப்படுத்
வாங்குகிற வரிப்பண
கொள்ளையடிக்கப்பட்ட ப
மாகும்!"

"அது போகட்டும்,
தொன்பதாவது எண்ணுள்
தில் இருக்கிற ஆதிக்கம் மூ
என்று சொல்கிறாயே! எல்லா
மூன்று,மூன்று என்றுசொல்
துபோல் இதையும்சொல்லிவி
டாய் என்றே நினைக்கிறேன்

"இல்லை, நம்மை யெல்லா
அடக்கி ஒடுக்க, மூன்று ஆதி
க்கங்கள் வடக்கே உருவா
யிருக்கின்றன. ஒன்று அர
யல் ஆதிக்கம், இரண்டாவ
பொருளாதார ஆதிக்கம், மூ
ன்றாவது மொழி ஆதிக்கம்! இந்
மூன்று ஆதிக்கங்களும் ஒன்
கச் சேர்ந்துதான், தெற்
படையெடுத்து வருகின்றன

"வடக்கு—தெற்கு என்
பேசுகிற உன்னோடு நா
இனிப் பேசமாட்டே
போகிறேன்."

# ஐந்தாண்டுத் திட்டங்களால்!

★

## "அதிசயம்" நிகழ்கிறது வடக்கில்!

—0—

## திட்டத்தின் சாதனைப்பகுதி அங்கே! வரிகொடுக்கும் வேதனைப்பகுதி இங்கே!

சென்ற வாரத்தில் வந்த சய்தித்தாள்களில் ஒரு "அதி பம்" வெளியிடப்பட்டுள்ளது. ழக்கம்போல் வருகிற வாழை ாத்தில் இரண்டுதார், எரு மக் கன்றுக்குட்டிக்கு மூன்று ண்கள் என்பவை போன்ற வ யல்ல!

இந்த அதிசயத்தை பண் த நேரு காங்கிரசுப் பார்லி மண்டரி கட்சிக் கூட்டத்தில் சால்லியுள்ளார். அந்த அதி யம் என்ன வென்றால்;

**"பஞ்சாபில் ஒரு கிராமத்தில் தனி பர் ஆண்டுவருமானம் ரு 1000மாக யர்ந்துள்ளது. இது இந்தியாவி ள்ளவர்களின் சராசரி ஆண்டு வரு ானத்தைப்போல் 4 மடங்கு அதிக னது."**

பஞ்சாப் சுற்றுப் பயணத் ல் அந்தக் கிராமத்தைப் ார்த்தபொழுது, அங்கிருந்த அதிசயிக்கத்தக்க முன்னேற் த்தைக் கண்டு" பூரித்துப் பானதாக பண்டித நேரு டறியுள்ளார்.

உண்மையிலேயே அது அதி யிக்கதக்க முன்னேற்றந்தான்! ந்தியாவில் தற்பொழுதுள்ள னிப்பட்டவர்களின் சராசரி ருமானம் 270 ரூபாய்! அர ாங்கம் போடுகிற திட்டங்கள் ல்லாம் எதிர்பார்த்தபடி ழுங்காக நிறைவேறினால், இப் பாழுதுள்ள சராசரி வருமா ம 1976-ல் இரண்டுமடங்காக ஆகும் எனக் கூறுகிறார்கள்.

சராசரி வருமானத்தை ரண்டுமடங்காக்க மற்ற குதிகளுக்கு 25 ஆண்டுகள் டித்தால், பஞ்சாபில் இரண்டு ஆண்டுகளுக்குள் சராசரி ஆண்டு வருமானம் 4மடங்காக யர்ந்திருக்கிறது!

அதாவது மற்றவர்களுக்கு ) ஆண்டுகள் பிடிப்பதை, பஞ் ாபிலுள்ள ஒரு கிராமத்தினர் ரண்டே ஆண்டுகளில் சய்துவிட்டனர்!

எப்படி இந்த அபரிமிதமான ருமான உயர்வு கிடைத்தது? ந்தக் கேள்விக்குப் பதிலைத் தரிந்துகொள்ள வேண்டு மனால், அந்தக் கிராமம் ருக்கிற இடத்தைத்தெரிந்து காள்ள வேண்டும். பத்தி க்கைச்செய்தி அறிவிக்கிறது.

**"அந்தக் கிராமம் பக்ரா அணைக் ட்டு இடத்திலிருந்து ஒரு மைல் ாத்திலிருக்கிறது!"**

ஒரு இடத்தில் வருமானம் ான்கு மடங்காக உயர்ந்திருப் தின் இரகசியம் தெரிகிறதா? ந்த இடத்தின் அருகே க்ரா அணைக்கட்டு போடப் ட்டுள்ளது.

பக்ரா—நங்கல் திட்டத்திற்கு துக்கப்பட்ட தொகை மொத் தம் 176 கோடி ரூபாய்! இவ்வ ளவு கோடிக்கணக்கான ரூபாய் களைக் கொட்டி திட்டங்கள் வளரும்போதும், வளர்ந்த பின்னும், அந்தத் திட்டங்களை யுடைய இடங்களில் வரு மானம் அதிகரித்துவிடுகிறது!

"வடக்கு—தெற்கு என்று பார்க்கக்கூடாது; வடக்கில் போடப்பட்டாலும் தெற்கில் போடப்பட்டாலும், எல்லாம் இந்தியாவுக்குத்தான்!" என்று நமக்குப் பலர் இதோபதேசம் செய்கிறார்கள். அவர்கள் இதைக் கவனிக்கவேண்டும், பக்ரா—நங்கலில் பெரிய திட் டம் போடப் பட்டால், அதை யடுத்துள்ள பஞ்சாப் மாநிலத் தில் வருமானம் நான்கு மடங் காகிறதேயன்றி, தெற்கில் பஞ் சப்பட்டி வட்டாரத்தில் இருப் பவனுடைய வருமானம் உயர் வதில்லை! திட்டங்கள் அதிக மாகப் போடப்படுகிற இடங் களில் பணம் அதிகமாகச் சேர் கிறது, தொழில்வளம் அதிக மாகிறது, அங்குள்ளவர்களின் வருமானம் மூன்று பங்கு நான்கு பங்கு உயர்கிறது!

இப்பொழுது போடப்பட் டுள்ள பெருந் திட்டங்களெல் லாம் வடநாட்டில் இருக்கின்ற காரணத்தால், அங்கு வருமா னம் அதிகமாகிறது! மக்க ளுடைய வாழ்க்கைத்தரம் பெருகுகிறது! அதேசமயம் தென்னாட்டில் பெருந்திட்டங் கள் போடப்படவில்லை. வட நாட்டில் செலவழிக்கப் படுவ தைவிட மிகக் குறைந்த அள விலேயே தென்னாட்டிற்கு பணம் ஒதுக்கப்படுகிறது! இங்கு தொழில்வளம் குறைய, வருமானமும் குறைவாகவே இருக்கிறது!

பக்ரா நங்கலுக்கு அருகி லுள்ள இடத்தில் சராசரி ஆண்டு வருமானம் நான்கு மடங்காக உயர்ந்ததை "அதி சயமாக"ப் பாராட்டுபவர்கள் தென்னாட்டில் தொழில் வளங் குன்றியிருக்கும் "அநியாயத் தையும்" கவனிக்கவேண்டும்.

ஐந்தாண்டுத் திட்டங்களில் வடக்கு வளர்கிறது, தெற்கு தேய்கிறது என்று சொல்வது வெறும் சொல்லடுக்குகளல்ல! வேதனைத்தாத்தக்க உண்மை கள்.

**ஐந்தாண்டுத் திட்டத்தின் சாதனை கள் எல்லாம் வடக்கில்! அதற்கு வரி செலுத்தும் வேதனைப்பகுதி மட்டும் தான் தென்னாட்டுக்குத் தரப்பட்டுள் ளது!**

176 கோடி, 110 கோடி, 80 கோடி என்று போடப்படுகிற பெருந்திட்டங்கள் எல்லாம் வடக்கில் குவிந்துள்ள கார ணத்தால் அங்கு "அதிசயங் கள்" நிகழ்கின்றன! அந்த அதிசயங்களைச் செய்தித்தாள் களில் படித்துப் பார்த்துத் திருப்தியடைய வேண்டிய நிலை யில் தென்னாட்டினர் இருக்கின் றனர்!

பஞ்சாப்பைச் சுற்றிப் பார்த் து வருகிற ஒருவர் இத்தகைய "அதிசயங்களைச்" சொல்லி மகிழ முடிகிறது! வடநாட்டில் எழுந்துள்ள புது அணைக்கட்டு களையும், தொழில் "க்ஷேத் திரங்களையும்" தரிசித்து வரு கிறவர்கள் அங்கு நிகழுகின்ற அதிசயங்களைச் சொல்கிறார் கள், தொழில் வளம் மிக வேக மாக வளர்வதைச் சொல்கிறார் கள், பாலைவனங்கள் சோலை வனங்களாவதைக் கூறுகிறார் கள், வருமானம் உயரும் வகை களைச் சொல்கிறார்கள்! நல்ல செய்திகள்தான், ஆனால் இங்கே! "ஐந்தாண்டுத் திட் டத்தின் புண்ணிய இடங்க ளெல்லாம் வடக்கில் தான் இருக்கின்றன" என காங்கிர சுப் பத்திரிக்கையாளர்களே எழுதுகிறார்கள்! நமது மந்திரி கள் கூடத்தான் நீண்ட சுற் றுப்பிரயாணங்களைப் போடுகி றார்கள், போய் வந்ததும் கூறு வதற்காகவாவது "அதிசயங் களை" ஏன் இங்கு உண்டாக்க வில்லை? அவர்களால் முடிய வில்லை!

**பக்ரா—நங்களுக்கு அருகிலிருக் கும் இடத்தில் ஆண்டு வருமானம் நான்கு மடங்காக உயருகிறது என் றால், அந்த பக்ரா—நங்கல் திட்டத் துக்கு மட்டும் டில்லி ஆட்சிசெலவிடும் பணம் 176 கோடி ரூபாய்! சென்னை மாநில அரசாங்கத்துக்கு இரண்டா வது ஐந்தாண்டுத்திட்டக் காலம் முழு வதற்கும் எல்லாவற்றுக்குமாகச் சேர்த்து டில்லி ஆட்சிபீடம் ஒதுக்கிய தொகை 153 கோடி ரூபாய்!**

அதிசயங்கள் நிகழும் "புண் ணிய பூமியாக" வடநாடும், வேதனைக் காட்சிகள் மிகுந்ததாய் தென்னாடும் இருப் பதில் ஆச்சரியமில்லை! ●

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கொலையைத் திட்ட மிட்டு நடத்தி, மாந்திரீகச் சக் தி தரும் "மனிதவிருந்தை" முன்னிருந்து நடத்திய பெண், கொலை செய்யப்பட்டவனு டைய சொந்தத் தாய்!

மாந்திரீக சக்தியைப் பெற மகனையேப் பலிகொடுக்க அவள் துணிந்து விட்டாள். தாய் கொடுத்த உணவை எந் தச் சந்தேகமுமின்றி மகன் சாப்பிட்டிருக்கிறான், சாப்பிட்ட தும் மயக்க முற்று படுத்து விட, மாந்திரீகச் சடங்கும் விருந்துச் சாப்பாடும் நடை பெற்றிருக்கின்றன!

அந்த மாந்திரீகக் கூட்டத் தில் கலந்துகொண்ட ஏழு பெண்களில் இரண்டு பெண் கள் சிறுவயதினராம், பதி னான்கு வயது, பதினாறு வயது அளவினராம். மாந்திரீ கச் சக்தியைக் கற்றுக்கொள் ளப் புதிதாக சேர்ந்தவர்க ளாம். அந்த இரு இளம் பெண்களில் ஒருத்தி கொலை யுண்டவனுடைய மகள்!

மாந்தரீக சக்தியைப் பெறு வதற்கு தாய் மகனைக் கொலை செய்திருக்கிறாள், தந்தைக் கொலை செய்யப்பட மகள் துணையாக இருந்திருக்கிறாள்! உலகத்தில் வேறெங்கும் நடை பெற்றிராத பயங்கரம்! தாய் மகன் என்ற பாசம், மகள்— தந்தை என்ற பாசம் எல்லாம் மாந்திரீகத்துக்கு முன் பறந் தோடிவிட்டன; பிணத்தைத் அறுத்து, கறியாக்கி, பெற் றெடுத்த தாயும், அவனால் பெற்றெடுக்கப்பட்ட மகளும் கூடி.........நினைக்கவே நெஞ்சு கூசுகிறது!

விஞ்ஞான ஆராய்ச்சியில் ஒரு நாய் அனுப்பப்பட்டதற்கு துயரப் படுபவர்கள், இதைப் போல மூடநம்பிக்கைக்கு மனி தன் பலியாக்கப்படும் கொடு மையைத் தடுக்க என்ன செய்கி றார்கள்!

ஜீவகாருண்யத்தைக் கருதி, மரக்கறி உண்பவர்களின் அகில உலக மாநாடு பம்பாயில் கூடி யது, அதற்கு பாரதக் குடியர சுத் தலைவர் இராசேந்திர பிர சாதும் சென்றிருந்தார்! மீன் மிருக மாமிச உணவு கூடா தென்பதற்கு பாடுபடும் இரா சேந்திர பிரசாதும், இந்தியாவி லுள்ள மற்ற ஜீவகாருண்ய வாதிகளும், முதலில் இந்த "மனித உணவுக்குக்" காரண மாக இருக்கும் மூட நம்பிக்கை யை ஓட்ட முன்வருவார்களா? இந்தியாவில் ஆழ்ந்திருக்கும் மூட நம்பிக்கையின் ஒரு கடுமை யான உதாரணமாக அந்தச் சம்பவம் நிகழ்ந்திருக்கிறது! தாய் மகள் என்ற பாசத்தை யெல்லாம் விரட்டியடித்துப் பெண்களை இரக்கமற்ற வெறி யர்களாக்கும் வகையில் நிலவும் மாந்திரீகச் சக்திகளை, கண் மூடித்தனமான நம்பிக்கைகளை ஒழித்தால்தான், மற்ற பண்பு களைப் பற்றி அவர்கள் பேச முடியும்! ○

"மன்றம்" அச்சகத்தில் (93, பிராட்வே, சென்னை-1. தமிழ்நாடு) ஆசிரியர், இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. உதவி ஆசிரியர்: இரா. செழியன், எம். ஏ.—(தொலைபேசி எண் : 55697)